ISSN 1888-1246

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...


விழி : 02 டிசம்பர் 2005 பார்வை : 16 விலை : ரூபா 25.00



உள்ளே....


ஏ. சி. ஜோர்ஜ் ■ ஆசிரியர் வகிபாகம்: மரபும் மாற்றமும்
க.சுவர்ணராஜா ■ பாடசாலைஅதிபர்களின் செயற்றிட்ட முகாமையாளர் வகிபாகம்
மா.செல்வராஜா ■ கல்வி வளர்ச்சியில் பயன் வழிவாத அணுகுமுறை
சபா. ஜெயராசா ■ கல்விச் சமூகவியலும் சமூகமயமாக்கலும்
ந.பார்த்தீபன் ■ மொழி தொடர்பான கொள்கைகளும் கற்றல் செயன்முறைகளும்
ச.கணேசமூர்த்தி ■ கஷ்டப் பிரதேச கல்விப் பிரச்சினைகள்
க.மு.கனகலிங்கம் ■ கல்வியும் கலைத்திட்ட அமுலாக்கமும்

எமது கல்வியியல் நூல் வரிசையில் புதிய
வரவாக வெளிவந்துவிட்டது!




**குழந்தை உளவியலும்**
**கல்வியும்**

பேராசிரியர், கலாநிதி

*சபா. ஜெயராசா*

பக்கம் : 179
விலை : ரூபா. 350/=

**POOBALASINGHAM**
**BOOK DEPOT**

# பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி,
இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

*தலைமை :*
*இல. 340,202 செட்டியார் தெரு.*
*கொழும்பு 11, இலங்கை.*
*தொ. பே. : 2422321*
*தொ. நகல் : 2337313*
*மின்னஞ்சல் : pbdho@sltnet.lk*

*கிளை :*
*இல. 309 A-2/3, காலி வீதி.*
*கொழும்பு 06, இலங்கை.*
*தொ. பே. : 2504266*
*தொ. நகல் : 4-515775*

*இல. 4 A, ஆஸ்பத்திரி வீதி.*
*பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.*

K BHARANEETHARAN
Editor Jeevanathy
Editor Kadal
Kalaiaham, Alvai.


# அகவிழி

மாத இதழ்

ஆசிரியர்:
தெ.மதுசூதனன்

ஆசிரியர் குழு :
சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

நிர்வாக ஆசிரியர்:
மனோ இராஜசிங்கம்

ஆலோசகர் குழு :
பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சபா.ஜெயராசா
(கல்வித்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
(கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(தலைவர், கல்வித்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)
மா.செல்வராஜா
(கல்விப் பிரிவு,
கிழக்குப் பல்கலைக்கழகம்)
தை.தனராஜ்
(நிபுணத்துவ ஆலோசகர்,தொலைக்கல்வி
நவீனமாக்கற் செயற்றிட்டம்
(DEMP/DEPP), கல்வி அமைச்சு)
உ. நவரட்ணம்
(பணிப்பாளர், தமிழ்த்துறை,
தேசிய கல்வி நிறுவகம்)

அச்சு :
ரெக்னோ பிரின்ட், கொழும்பு - 06
தொலைபேசி: 0777-301920

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு :
**AHAVILI**
3, Torrington Avenue, Colombo - 07.
Tel : 011-2506272
E-mail : ahavili@viluthu.org


## ஆசிரியரிடமிருந்து...

கல்வி சார் செயற்பாடுகள் அதன் முறைமை பற்றி பல்வேறு நிலைகளில் சிந்தனைகள், ஆய்வுகள் வெளிப்பட்டாலும், அவை பாடசாலை மட்டத்தில் தாக்கம் செலுத்துபவையாக இல்லை. உருவாக்கப்படும் கலைத்திட்டத்திலும் அவற்றின் தாக்கம் இல்லை. அல்லது அவற்றில் இடம் பெற நீண்டகாலம் எடுக்கும்.

தற்போது கல்வியில் நிகழ்ந்து வரும் மாற்றங்களிலும் பார்க்க சூழலில் மற்றும் பன்னாட்டு மட்டங்களில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள் வேகமாக உள்ளன. இந்த மாற்றங்களை உள்வாங்குவதற்கு முழுநிலைப் பொறிமுறை கல்வி முறையில் உருவாக்கப்படவில்லை. இதனால் பாடசாலை கலாசாரத்தில் இவற்றின் தாக்கம் முழுமையாக இல்லை. தொடர்ந்து ஆசிரியர்களும் மூடுண்ட சிந்தனை, மனப்பாங்கு இறுக்கத்திலேயே இருந்து வருகிறார்கள்.

ஆசிரியர்கள் பாடசாலை என்ற நிறுவனத்தின் உள்ளீடுகளில் முக்கியமானவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக தமது திறன்களை வளர்த்துக் கொள்வதன் மூலமே பாடசாலை கலாசாரத்தின் செழுமைக்கு உதவ முடியும். ஆனால் நடைமுறையில் எந்தவொரு ஆசிரியரும் தமது சுயமுகாமைத்துவம் பற்றிய சிரத்தை எதுவுமின்றியே ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்பாடுகளின் விளைநிலமாக பாடசாலையும் அதன் கலாசார அணிதிரட்டலும் உள்ளது. இருப்பினும் பாடசாலைக் கலாசாரம், கற்பித்தல் செயல்முறையில் ஆரோக்கியமான விரைவான மாற்றங்களை வேண்டியுள்ளது. இதற்கு ஆசிரியர்கள் சுய உணர்வு சுயமரியாதை மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். இதன் மூலமே தமது அதி உயர்ந்த வாழ்தொழில் மேம்பாட்டின் இயங்கு விசைகளாக தொழிற்பட முடியும்.

மாறிவரும் கல்விமுறை, அதன் உள்ளீடுகளை மற்றும் கல்வியின் நோக்கத்தை சமூகமயமாக்க வேண்டும். அப்பொழுது தான் கல்வி பற்றிய சிந்தனை, தேடல் சிவில் சமூகத்தில் ஆழமாகப் பரவ முடியும். இதன் மூலமே பாடசாலை - ஆசிரியர் - மாணவர் குறித்த விழிப்புணர்வு, அக்கறை, கண்காணிப்பு யாவும் சமூகத் தளத்தில் விரிவு பெற முடியும். அப்பொழுதுதான் ஆரோக்கியமான பாடசாலைக் கலாசாரம் உருவாக்க முடியும்.

கல்வியில் நிகழ்ந்து வரும் மாற்றங்களின் வேகத்துக்கேற்ப ஆசிரியர் சமூகமும் தன்னை உருமாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது. இது தவிர்க்க முடியாது.

❑

# ஆசிரியர் வகிபாகம்: மரபும் மாற்றமும்

ஒரு ஆசிரியர் ஏனைய தொழில்களைக் காட்டிலும் அதிகளவான நடிபங்குகளை அல்லது வகிபாகத்தினை ஏற்பவராக இருக்கிறார். தான் சார்ந்துள்ள நிறுவனம் நிறுவனமல்லாத நிலைகளில் பல நடிபங்குகளை ஆற்ற வேண்டியுள்ளது. கல்வி உலகில் அவர் ஏற்கும் "ஆசிரியர் பாத்திரம்" தொடர்பாக மரபு ரீதியான பாத்திர நடிபங்கிற்கும் மாறிவரும் உலகில் அவர் ஏற்க வேண்டிய பாத்திரத்திற்கும் உள்ள தொடர்பினை மட்டும் எல்லைப்படுத்தி இக்கட்டுரையாசிரியர் ஆசிரியர் நடிபங்கில் மரபும் மாற்றமும் என்னும் இத்தலைப்பில் இக்கட்டுரையினை அமைக்கின்றார்.

ஏ. சி. ஜோர்ஜ்
ஆசிரிய ஆலோசகர்
கல்வி வலயம், யாழ்ப்பாணம்

கற்றல் கற்பித்தல் செயல்பாட்டில் ஆசிரியர் நடிபங்கானது வெவ்வேறு காலப்பகுதியில் வெவ்வேறான நிலைகளைப் பெற்று நிலைமாற்றம் அடைந்துள்ளது. இதனை ஆங்கிலத்தில் **3T (Three T modee) modee** என அழைப்பர். மேற்கு நாடுகளிலும் **3 T model** லானது ஒன்றில் இருந்து மற்றதிற்கு படிப்படியாக மாறி வந்துள்ளது. This is a Paradim shift in teaching leatring process. 3 T model என்பது ஆசிரியர் கற்பித்தல் நடிபங்கில் (Role of the Teacher) காணப்பட்ட 3 வகையான நிலைகளாகும் (Stages). T என்ற ஆங்கில எழுத்தில் தொடங்கும் சொல்லை அடிப்படையாகக் கொண்ட நடிபங்கினை இது குறிக்கும்.

* Transmission role (கடத்தல் வகிபாகம்)
* Transaction role (கொடுக்கல் - வாங்கல் வகிபாகம்)
* Transformation role (நிலைமாற்று வகிபாகம்)

## கடத்தல் வகிபாகம்

3 T model லில் ஆசிரியர் நடிபங்கானது மரபுரீதியாக Transmission role ஆக இருந்து வருகின்றது. முதலாவது T யில் ஆசிரியரின் செயற்பாடு அவரை மையமாகக் கொண்டது. ஆசிரியர் அறிவின் உறைவிடமாகவும் அனைத்தும் தெரிந்தவராகவும், எல்லாம் வல்லவராகவும் விளங்குகின்றார். ஆசிரியர் அதிகளவு மேலாதிக்கமும் அதிகாரமும் கொண்டவர். இந்த நடிபங்கில் தமக்கு எல்லாம் தெரியும் என்றும் மாணவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்றும் ஆசிரியர் கருதுகின்றார். மாணவர்களை ஆசிரியர் ஒரு வெற்றுக் கோப்பையாக கருதுகின்றார். அதற்கு எதிராக ஆசிரியர் தன்னை நிறை குடமாக கருதுகின்றார். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது ஆசிரியர் வெற்றுக் கோப்பையிலுள்ள நீரை நிரப்புவதாக தன்செயற்பாட்டினை அமைக்கின்றார். இந்த நடிபங்கினை ஆங்கிலத்தில் Jug - Mug role or melhod எனக் கூறுவர். இதனை Chalk and talk method எனவும் கூறலாம். எல்லாம் தெரிந்த வல்லவரான ஆசிரியர் தனது கற்பித்தல் செயல்பாட்டினை அமைத்தார். இந்த நடிபங்கில் அல்லது இந்த T Model லில் அவரது நடிபங்கானது கற்பித்தலானது கற்றலை விட மேலானது எனக் கருதுகின்றார் (Teaching is more important ther than learning).

இன்றும் எமது பல வகுப்பறைகளில் Transmission role லை மேற்கொள்ளும் பல ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் மாணவர்களை நோக்கி கேள்விகளை எப்போதும் எழுப்புவராகவும் ஒரு உரைகாரரைபோல் கற்பிப்பவராகவும் காணப்படுகின்றனர்.

## கொடுக்கல் — வாங்கல்கள் வகிபங்கு

2 T யில் ஆசிரியரது வகிபாகம் Transsaction role ஆக மாற்றமுறுகின்றது. இங்கு முதலாவது T யில் காணப்பட்ட ஒரு வழித் தொடர்பான (one way process) கற்பித்தல் முறைக்குப் பதிலாக இருவழித் தொடர்பாடல் முறை காணப்படுகின்றது. இது முன்னைய முறையினைக் காட்டிலும் சிறப்பானது. இங்கு ஆசிரியர் நடிபங்கானது இருவழித் தொடர்பில் அமைகின்றது. (Two way Process) இங்கு கற்பித்தலும் கற்றலும் முக்கியம் பெறுகின்றது. பிள்ளைகளுக்கு ஆசிரியரானவர் அதிகாரபலமுடையவராக எல்லாம் தெரிந்தவராக அல்லது ஒரு உரைகாரர் போல (Chatter box) செயற்பட மாட்டார். இங்கு ஆசிரியரது நடிபங்கு ஒரு உதவுபவர் போல

மாற்றமடைகின்றது. பிள்ளைகளின் கற்றல் இடர்பாடுகளுக்கு கைகொடுத்துதவும் நண்பராகவும், கற்றலுக்கான சூழலை வழங்கும் ஏற்பாட்டாளராகவும் ஆசிரியர் செயற்படுவார்.

பிள்ளையின் அருகில் இருந்து தெரிந்ததில் இருந்து தெரியாததிற்கும், எளிமையில் இருந்து கடினமானதிற்கும், உருவத்தில் இருந்து அருவத்திற்கும் ( பிள்ளைகளை எடுத்துச் செல்வார். இங்கு ஆசிரியர் வகிபாகமானது ஆரம்பத்தில் இருவழித் தொடர்புடையதாக அமைந்தாலும் அது படிப்படியாக பல வழித் தொடர்பு கொண்டதாகவும் வளர்ச்சியடையும்.

(First its starts with two way communication then it develop to multi directional way )

நம்மத்தியில் பல ஆசிரியர்கள் 2வது T model லை பின்பற்றுபவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆசிரியர் சனநாயகத் தன்மையை வகுப்பறையில் நிலவச் செய்பவராகவும் பிள்ளையினை மையமாகக் கொண்டு இயங்குபவராகவும் காணப்படுவார்.

## நிலைமாற்று வகிபாகம்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல் கல்விச் செயற்பாட்டில் ஆசிரியர் நடிபங்கானது ஒரு Paradim shift க்கு உட்பட்டுள்ளது. அந்த வகையில் ஆசிரியர் வகிபாகம் குறித்த 3T ஆனது ஒரு Paradim shift ஆகும். (every T moves to other stage is a paradim shift) மூன்றாவது 'T' யில் ஆசிரியரது வகிபாகமானது ஆசிரியர் ஒரு வளவாளராக மாறுகின்றார். மரபு ரீதியான நடிபங்கில் இருந்து மாற்ற முயறுகின்றார். மாற்றமடைவது மட்டுமல்ல மாற்றத்திற்கான முகவராகவும் அவரே செயற்படுவார். ஆசிரியர் ஒரு வளவாளர் (Resource Person) என்ற பாத்திர ஏற்பில் அவரது பணியானது பின்வருமாறு மாறுகின்றது. The Teacher is a resource person who will interveen and help the student when it needed those who are in low proficeney level assist them to reach the near proficeney level. அதாவது, தேவைப்படும் இடங்களில் மட்டுமே ஆசிரியர் தலையீடு செய்வார். குறைந்த தேர்ச்சி மட்டத்தினைக் கொண்ட பிள்ளைகளை அண்மிய தேர்ச்சி மட்டத்திற்கு மாறுவதற்கு உதவிபுரிவார். இங்கு பிள்ளைகள் தாமே செயல்பட்டு தேர்ச்சிகளைப் பெறுவர். இதனை தேர்ச்சி மட்ட கல்வி (Competency based edcation) என்பர். மூன்றாவது T நடிபங்கில் பின்வரும் அம்சங்கள் காணப்படும்.

* மாணவர் மையமானது (Student centered)

* தேர்ச்சி மைய அணுகுமுறை (Competency based approch)

* செயற்பாட்டு அடிப்படையான கற்றல் (Activity Base approch)

இங்கு ஆசிரியர் பிள்ளைகளிடம் எந்த வினாக்களையும் "உனக்குத் தெரியுமா?" என்ற விதத்தில் எழுப்பமாட்டார். விரிவுரைகளை ஆற்றமாட்டார். மாணவர்கள் வெறுமனே செவிமடுப்பவர்களாக காணப்படமாட்டார்கள். அமைப்பியல் வாத அணுகுமுறை கையாளப்படும் (Constructivism). பிள்ளைகளிடம் பணிகள் ஒப்படைக்கப்படும். It is a Position the teacher let the student to develop the talents இங்கு கற்பித்தலும் முக்கியமானதாகவோ கற்றலும் கற்பித்தலும் முக்கியமானதாகவோ அமையாமல் கற்றல் மட்டுமே முக்கியமானதாக அமையும் (Learning is important than Teaching). Teach - Teacheng - Teacher என்ற தொடர்புக்குப் பதிலாக Learn - Learning - Learner என்ற தொடர் முக்கியம் பெறும்.

இத்தொடர்புக்கு அமைவாக ஆசிரியர் பணி அல்லது வகிபாகம் கற்றலை மையமானதாகக் கொண்டு அமையும். பிள்ளைகள் தாமாகவே கற்பதற்கும் கற்றலுக்கு கற்பதற்கும் (learn to learn) ஏற்ற சூழலை ஆசிரியர் உருவாக்குவார்.

ஆசிரியரின் இந்த வகிபங்கினை விளக்குவதற்கும் கற்றலை முதன்மைபடுத்துவதற்குமான விளக்கத்தினைப் பெற கௌதம புத்தரின் கதை ஒன்றின் மூலம் இதனைப் புரிய வைக்கலாம் எனக் கருதுகின்றேன். அனைவருக்கும் தெரிந்த கதையான இறந்து போன தனது மகனை உயிர்பித்து தரும்படி கௌதம புத்தரிடம் வந்த தாயினை நோக்கி அவளிடம் ஒரு வேலையை (Assignment) ஒப்படைத்தார். மரணம் சம்பவிக்காத வீட்டில் இருந்து ஒரு மிளகு எடுத்து வந்தால் மகனை உயிர்பித்து தருவதாக அவளிடம் ஒரு பணி ஒப்படைத்தார். அவள் தனது வேலையை தானே செய்த போது , ஆராய்ந்த போது அவளுக்கு உண்மை (truth) தெரியவந்தது. கௌதம புத்தர் ஒரு நல்ல வளவாளர், (resource person) ஆசிரியன். அவர் தன்னிடம் பிரச்சினைகளுடன் வந்த பெண்ணிற்கு விரிவுரைகள் ஆற்றவில்லை. அல்லது எல்லாம் தெரிந்தவர் போல் உரையாற்றவில்லை. Budda never lectured her or gave advice to her. he gave her an assignment after only she comes to know the truth through investigation. Like Budda a teacher as a transformation role must give assignment to the stu-

**பிள்ளையின் அருகில் இருந்து தெரிந்ததில் இருந்து தெரியாததிற்கும், எளிமையில் இருந்து கடினமானதிற்கும், உருவத்தில் இருந்து அருவத்திற்கும் (Concreat to abstruct) பிள்ளைகளை எடுத்துச் செல்வார். இங்கு ஆசிரியர் வகிபாகமானது ஆரம்பத்தில் இருவழித் தொடர்புடையதாக அமைந்தாலும் அது படிப்படியாக பல வழித் தொடர்பு கொண்டதாகவும் வளர்ச்சியடையும்.**

dents to transform them கௌதம புத்தரைப் போல் ஆசிரியர்களும் பிள்ளைகளிடம் ஒப்படைகளை வழங்கி தேவையான நேரத்தில் தலையீடு செய்து அவர்களே உண்மையைப் பெறுவதற்கான வளவாளர்களாக ஆசிரியர் பணி மாற வேண்டும். பிள்ளையை மாற்ற ஆசிரியர் பணி மாற வேண்டும். கௌதம புத்தர் இதனையே செய்தார்.

மாறிவரும் கல்வி உலகில் தேசிய கல்வி நிறுவகம் (NIE) தனது கலைத்திட்ட தூரநோக்காக (Curriculum Vision) மூன்று விடயங்களை தீர்மானித்துள்ளது. இதனை 'கலைத்திட்ட மூன்று தூண்கள்' என்பர் (Three pillats of curriculum vision) இன்று இருக்கும் கலைத்திட்டத்தினை மாறிவரும் கல்வி உலகிற்கு பொருந்தும் வகையில் இந்த தூரநோக்கு அமைக்கப்பட்டுள்ளது. அதாவது இன்று இருப்பதனை (Now) எதிர்காலத்தில் விரும்பும் ஒரு நிலைக்கு (Disitable) மாற்றுவதாகும்.

**தேசிய கல்வி நிறுவனத்தின் இந்த கலைத்திட்ட தூரநோக்கினை அமுலாக்கும் ஆசிரியர் ஒருவரின் வகிபாகம் வகுப்பறையில் *Transformation role* உடையதாக இருக்க வேண்டும். பிள்ளைகளுக்கு செயற்பாடுகளை வழங்கும் ஆசிரியராக அவர் கருமமாற்ற வேண்டும். பிள்ளைகள் தாமே சுயமாக ஆய்வு செய்து தமது அறிவினை உயர்த்திக் கொள்வர். *(Student explore and find their own knowledge).* இது மாணவர் மையமானது. செயற்பாட்டு அணுகுமுறையைக் கொண்டது. *Proficeney* மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டது.**

| இன்று இருப்பது (Now) | எதிர்பார்ப்பது (Distrable) |
|---|---|
| * தெரிந்தவற்றினைப் பாதுகாத்தல் (retaining the know) | * தெரிந்தவற்றை மீளமைப்பு செய்வது. (Revising the Known) |
| * முன்னர் தீர்மானிக்கப்பட்டவற்றை கற்றல் (Learning the pere determine) | * தீர்மானிக்கப்படாதவற்றை ஆய்வு செய்தல் (Exploring the undetermine) |
| * இருப்பதினை கட்டி எழுப்புதல் (Constructing what is peing) | * எவ்வாறு இருக்க வேண்டும் என அமைத்தல். (Constructing what might be) |

இதனை நாம் Constructivisim என்கின்றோம். தேசிய கல்வி நிறுவனத்தின் இந்த கலைத்திட்ட தூரநோக்கினை அமுலாக்கும் ஆசிரியர் ஒருவரின் வகிபாகம் வகுப்பறையில் Transformation role உடையதாக இருக்க வேண்டும். பிள்ளைகளுக்கு செயற்பாடுகளை வழங்கும் ஆசிரியராக அவர் கருமமாற்ற வேண்டும். பிள்ளைகள் தாமே சுயமாக ஆய்வு செய்து தமது அறிவினை உயர்த்திக் கொள்வர். (Student explore and find their own knowledge). இது மாணவர் மையமானது. செயற்பாட்டு அணுகுமுறையைக் கொண்டது. Proficeney மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டது. எனவே ஆசிரியர் ஒருவரின் 3 T model வகிபாகத்தில் Transformation roleல் அவர் தேவை. சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் பலவீனத்தினை நீக்கவும் பலத்தினை பாராட்டவுமான தலையீட்டினை மேற் கொள்ளும் ஒரு வளவாளராக நடிபங்கினை ஏற்கிறார். இது முற்றிலும் ஒரு Activity base approach ஆகும். இத்தகைய ஒரு வகிபாகத்தினை வகுப்பதற்காக வகுப்பறைகளில் ஆசிரியர் தன் முன்னாயத்தங்களை Five 'E' model ல் தயாரிக்க வேண்டும். Five 'E' model லானது ஆசிரியரின் நடிபங்கினை செயற்பாட்டு அடிப்படையாக்குகின்றது. Five 'E' model லானது

(1) Engagemert

(2) Exploration


(3) Explanation

(4) Elabration

(5) Evaluation

என்ற ஐந்து பிரமணங்கள் கீழ் தயாரிக்கப்பட வேண்டும். இதனை Activity base lesson plan என்பர். இதில் ஆசிரியர் ஒருவர் Transmission roleலினை ஏற்பார்.

T modelலினை கீழ்வரும் ஒரு விளக்கப்படம் மூலமும் காட்டலாம். ஆசிரியரின் வகிபாகமும் அவரின் முக்கியத்துவமும் மாறி வரும் முறையினை கீழேயுள்ள படம் விளக்குகின்றது.



# பாடசாலை அதிபர்களின் செயற்றிட்ட முகாமையாளர் வகிபாகம்

பாடசாலைகளில் புதிய புதியச் செயற்பாடுகளை உருவாக்கி நடைமுறைபடுத்தும் போது அவை பெரும்பாலும் பாடசாலையின் நாளாந்த கலைத்திட்டச் செயற்பாடுகளின் தரநிலையில் குறைவினை பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. ஆசிரியர்கள் செயற்றிட்டங்களில் கூடுதல் அக்கறை செலுத்தும் போது மிகக் குறைவான எண்ணிக்கையுள்ள மாணவர்களின் கற்றல் நலன்கள் கவனத்திற் எடுக்கப்பட்டு, கூடியளவு மாணவர்களின் கற்றல் நலன்கள் புறக்கணிக்கப்படும் அபாயம் ஏற்படலாம். இந்நிலையில் பாடசாலையின் பண்பு, தரம் பாதிக்கப் படலாம்.


க.சுவர்ணராஜா
விரிவுரையாளர்,
கல்வியியல் கல்லூரி, வவுனியா


ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் பாடசாலைகளின் செயற்பாடுகள் பல்தரப்பட்டவையாகும். பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகளுடன் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றனர். இதுவே பாடசாலையின் உள்ளீடாக அமைகின்றது. பாடசாலைகளின் பணிகள் யாவும் இத்தகைய பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டே திட்டமிடப்படுகின்றன. தனியார் அபிவிருத்தியின் ஊடாக சமூக அபிவிருத்தி என்ற நோக்கில், தனியாட்களாகிய மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை இனங்கண்டு விருத்தியாக்கும் பணியில் பாடசாலைகள் ஈடுபடுகின்றன.

பாடசாலைகளின் முதன்மை முகாமையாளர்களாக பாடசாலை அதிபர்கள் காணப்படுகின்றனர். பல்வேறு செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்தும் ஒரு கல்வி முகாமையாளராக திகழும் அதிபர், ஒரு பெறுமதிமிக்க வளமாக கருதப்படுகின்றார். திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், மதிப்பிடுதல், என்ற முகாமைத்துவ கடமைகளின் முதுகெலும்பாக நிகழும் அதிபர்கள் இன்று செயற்றிட்ட முகாமையாளர் என்றதொரு நவீன வகிபாகத்தையும் ஏற்க வேண்டியுள்ளார். பாடசாலைகளில் இடம்பெறும் கலைத்திட்ட அமுலாக்கச் செயற்பாடுகளின் மத்தியில் செயற்றிட்ட முகாமைத்துவம் ஒரு புதியதொரு சவாலாக அதிபர்களின் முன் எழுந்துள்ளது எனலாம்.

இன்று எல்லா பாடசாலைகளிலும் செயற்றிட்டம் என்றதொரு சொல் பரவலாக உச்சரிக்கப்படுகின்றது. மாணவர்கள் ஈடுபடும் செயற்றிட்டங்கள், ஒரு கற்றல் முறையான செயற்றிட்டங்கள் என்பதனை விட, பாடசாலை அபிவிருத்திக்கான செயற்றிட்டங்கள் பற்றியும் பெரிதும் கவனத்திற் கொள்ளப்படுகின்றது. பாடசாலைமட்டத்தில் நிகழும் குறைபாடுகளுக்கும், பிரச்சினைகளுக்கும், முரண்பாடுகளுக்கும் செயற்றிட்டங்களை முன்வைப்பதில் அரச நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு அணி வகுத்து நிற்கின்றன.

அண்மையில் என்னிடம் கலந்துரையாடிய ஒரு பாடசாலை அதிபர் பல்வேறுபட்ட நிறுவனங்களால் தனித்தனியாக முன்வைக்கப்பட்ட பல செயற்றிட்டங்களை தான் ஒருவனாக தாங்கி நின்று நடைமுறைப்படுத்துவதாக சற்று சலிப்புடன் கூறினார். அவரது சலிப்பு நிறைந்த குரலின் பின்னே செயற்றிட்ட முகாமைத்துவத்தின் பிரச்சினைகள் தெளிவாக வெளிப்பட்டன.

பாடசாலைகளைப் பொறுத்தவரையில் பாடசாலையின் உள்ளேயும் பல்வேறு செயற்றிட்டங்கள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இந்நிலையானது பாடசாலையின் விருத்திக்கு உதவுவதோடு ஆசிரியர்களின் சுயவாண்மை விருத்திக்கும் பெரிதும் உதவுகின்றது என ஆசிரிய கல்விக் கோட்பாடுகள் கூறுகின்றன.

ஆகவே பாடசாலைகளைப் பொறுத்த வரையில் செயற்றிட்டங்கள் மிக அவசியமான ஒன்றாகவே காணப்படுகின்றன. தனியார் உற்பத்தி நிறுவனங்களும், அரச சார்பற்ற சமூக நிறுவனங்களும் தமது செயற்பாடுகளை செயற்றிட்டங்கள் மூலமாகவே வெற்றிகரமாக நிறைவேற்றுகின்றன.

பாடசாலைகள் தமது பிரதான கலைத்திட்டத்தை மேம்படுத்தும் (Enrichment) வகையில் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலையில் ஒரு செயற்றிட்ட முகாமையாளராக அதிபரின் பணி விரிவடைகின்றது.

பொதுவாக பாடசாலைகளில் காணப்படும் விளைதிறன் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு அல்லது பெறுபேற்று நிலையினை உயர்த்துவதற்கு செயற்றிட்டங்கள் அவசியமாகின்றன. மேலும் புதிய புதிய விடயங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கும் செயற்றிட்டங்கள் தேவையாகின்றன. அத்துடன் உள்நாட்டு யுத்தம், சுனாமி போன்ற இயற்கை அழிவுகள் என்பவற்றால் ஏற்பட்டுள்ள கல்வி இழப்புக்களை, அடைவுமட்ட வீழ்ச்சி நிலைகளை, நிவர்த்தி செய்வதற்கு ஒரு சிறந்த உபாயமாக செயற்றிட்டங்கள் அமைகின்றன. ஆகவே செயற்றிட்டங்கள் அவசியமானவை என்ற நிலையில் அவற்றை வெற்றிகரமாக்குவதற்கு அதிபர்களின் செயற்றிட்ட முகாமைத்துவ திறன்கள் விருத்தியாக்கப்படுதலும் அவசியமானதாகும்.

பொதுவாக பாடசாலைகளில் காணப்படும் விளைதிறன் குறைப்பாட்டினை நிவர்த்தி செய்வதற்கு அல்லது பெறுபேற்று நிலையினை உயர்த்துவதற்கு செயற்றிட்டங்கள் அவசியமாகின்றன. மேலும் புதிய புதிய விடயங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கும் செயற்றிட்டங்கள் தேவையாகின்றன. அத்துடன் உள்நாட்டு யுத்தம், சுனாமி போன்ற இயற்கை அழிவுகள் என்பவற்றால் ஏற்பட்டுள்ள கல்வி இழப்புக்களை, அடைவுமட்ட வீழ்ச்சி நிலைகளை, நிவர்த்தி செய்வதற்கு ஒரு சிறந்த உபாயமாக செயற்றிட்டங்கள் அமைகின்றன.

## செயற்றிடங்கள் என்றால் என்ன?

செயற்றிட்டங்கள் என்பது தற்காலிகமான ஒரு செயற்பாடாகும். "Projects are Temporary in nature, while Operations are ongoing" என்கிறார் Kim Heldman என்பார். ஆகவே ஒரு நிறுவனத்தின் ஒழுங்கமைத்த செயற்பாடுகளின் தொடர்ச்சி நிலையில் செயற்றிட்டங்கள் தற்காலிகமான செயற்பாடுகள் எனலாம்.

ஒரு விசேட தேவைக்காக, அல்லது விசேட நிலைமைக்காக செயற்றிட்டங்கள் முன் வைக்கப்படுகின்றன. உதாரணமாக ஒரு கார் உற்பத்தி நிறுவனத்தில் வழமையான மாதிரியை விட ஒரு மாதிரியை வடிவமைத்தல் ஒரு செயற்றிட்டமாகும். இங்கு கார் உற்பத்தி என்ற செயற்பாடு தொடர்ச்சியானது. ஆனால் புதிய வடிவமைப்பை, புதியரகத்தை ஏற்படுத்துதல் செயற்றிட்டமாகும்.

பாடசாலைகளைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட வகுப்பு பிள்ளைகளின் மொழித் திறனை குறிப்பிட்ட சதவீதத்தால் குறிப்பிட்ட காலத்திற்குள் உயர்த்துதல் ஒரு செயற்றிட்டமாகும். இருப்பினும் பாடசாலையின் நாளாந்த கலைத்திட்ட அமுலாக்கல் செயன்முறை தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருக்கும்.

## செயற்றிட்டங்களின் குணப்பண்புகள்

பொதுவாக எல்லாச் செயற்றிட்டங்களும் பின்வரும் நான்கு குணப்பண்புகளைக் கொண்டிருக்கும் அவையாவன.

1 செயற்றிட்டங்கள் குறிப்பானவை, அல்லது தனித்தன்மை (Projects are unique) வாய்ந்தவை

செயற்றிட்டங்கள் குறித்த ஒரு செயற்பாட்டுடன் தொடர்புடையது எனலாம். செயற்றிட்டத்தின் மூலம் அடைய எதிர்பார்க்கப்படும் இலக்கு விசேடமானதாகும். அத்துடன் அவை குறுகிய காலத்தினுள் அடையக் கூடியதாகவும் காணப்படும். ஒரு செயற்றிட்டம் அடைய வேண்டிய இலக்கு மிகவும் தெளிவானதாக எளிமையானதாக காணப்படும்.

II செயற்றிட்டங்கள் தற்காலிகமானவை

ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளுடன் ஒப்பிடும் போது செயற்றிட்டங்கள் தற்காலிகமானதாக காணப்படும். வரையறுக்கப்பட்ட காலத்தை (Limited time frame) கொண்டிருக்கும். செயற்றிட்டம் தொடங்கும் திகதி, முடிவடையும் திகதி, திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கும்.

III செயற்றிட்டத்தின் இலக்குகள் அடையப்படும் நிலையில் செயற்றிட்டங்கள் முடிவுறுத்தப்படும்.

செயற்றிட்டத்தால் அடையப்பட வேண்டியவை தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பதால் செயற்றிட்டத்தின் இலக்குகள் அடையப்பட்டவுடன் அவை முடிவுறுத்தப்படும்.

IV செயற்றிட்டமானது நிதிப்படுத்துவோனின் (Stake Holder) எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதாக அமையும். ஒரு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவிய அல்லது எதிர்பார்த்து உதவியளித்தோரின் எதிர்பார்ப்புக்களை திருப்திப்படுத்துவதாக அமையும்.

## செயற்றிட்ட முகாமைத்துவம்.

செயற்றிட்டம் என்பது ஒருவரால் தயாரிக்கப்பட்டு, அதில் மற்றவர்களை ஈடுபடுத்தி அல்லது திணித்து செயற்படுத்தப்படும் ஒன்றல்ல. மாறாக ஒரு செயற்றிட்டத்தின் திட்டமிடல் நிலை தொடங்கி அதன் இறுதி அறிக்கை வெளியிடப்படும் வரை எல்லோரினதும் பற்குபற்றுதலும் ஒத்துழைப்பும் மிகவும் வேண்டபட்டதான ஒரு செயற்பாடாகும். பங்குபற்றுனர்களின் விருப்புக்களும் அபிலாஷைகளும் கவனத்திற் கொள்ளாமல் தயாரிக்கப்பட்டு திணிக்கப்படும் செயற்றிட்டங்கள் "பெறுமதி-

யான நேரத்தின், அல்லது பெறுமதியான பணத்தின் விரயங்களாக" முடிவடைகின்றன. ஆகவே செயற்றிட்டம் என்பது ஆரம்ப நிலை தொடங்கி இறுதிநிலை வரை கூட்டு உழைப்பை வலியுறுத்தும் ஒன்றாகும். இக்கட்டத்தில் செயற்றிட்ட முகாமைத்துவம் என்பது பங்குபற்றுதலையும், ஒத்துழைப்பையும், திட்டமிட்டு ஊக்குவிக்கும் ஒரு பொறுப்புடைய செயலாக அமைகின்றது எனலாம்.

ஒரு செயற்றிட்ட முகாமையாளர் என்றவகையில் ஒரு அதிபர் உபகரணங்களையும், நுட்பங்களையும் ஒன்றிணைத்து மனிதச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து நெறிப்படுத்தி ஊக்குவித்து செயற்றிட்டத்தின் நிகழ்ச்சிகளை நிறைவேற்ற வேண்டியவராக உள்ளார்.

செயற்றிட்ட முகாமைத்துவத்தின் செயன்முறைகள் பின்வருமாறு அமைகின்றன.

| | |
|---|---|
| தொடங்குதல் | (Initiation) |
| திட்டமிடுதல் | (Planning) |
| நிறைவேற்றுதல் | (Executing) |
| கட்டுப்படுத்தல் | (Controlling) |
| முடிவு செய்தல் | (Closing) |

என்பனவாகும்.

செயற்றிட்டத்தை தொடங்குதல் என்பது செயற்றிட்ட தேவையை நியாயப்படுத்துதல், அதற்கான நிதியை பெறக் கூடிய சாத்தியம் பற்றி சிந்தித்தல் என்பனவாகும்.

செயற்றிட்டத்தை திட்டமிடுதல் என்னும் போது செயற்றிட்ட நோக்கத்தையும், இலக்குகளையும் தீர்மானித்தல், செயற்பாடுகளையும், செயற்கூறுகளையும் தீர்மானித்தல் செயற்றிட்டம் பற்றிய தொடர் கலந்துரையாடலை நிகழ்த்தி, பொறுப்புக்களை பிரித்தல், பாதீடு தயாரித்தல் செயற்றிட்டத்திற்கான சவால்களை வெற்றி கொள்ளல் தொடர்பாக தீர்மானித்தல் என்பனவாகும்.

வெற்றிடத்தை நிறைவேற்றுதல் என்பது Project Plans in to action ஆகும். இங்கு திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். செயற்றிட்டத்திற்கான வளங்கள், நேரம் என்பன தீர்மானிக்கப்பட்டு செயற்றிட்ட செயற்பாடுகள் ஆரம்பமாகும்.

கட்டுப்படுத்தல் எனும் போது செயற்றிட்டத்தின் ஒவ்வொரு படிநிலையிலும் வெளியிடப்படும் வெளியீடுகள் அளக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும் நிலையாகும். திட்டத்திற்கு அமைவாக செயற்பாடுகள் நடைபெறுவது இங்கு உறுதி செய்யப்படும். தேவையான திருத்தங்களும், மாற்றங்களும் இங்கு மேற்கொள்ளப்படும்.

செயற்றிட்டத்தை முடிவுறுத்தல் என்பது செயற்றிட்டத்தின் இலக்கு அடையப்பட்ட நிலையில் அல்லது செயற்றிட்டத்தின் காலம் முடிவடைந்த நிலையில் நடைபெறும் செயற்பாடாகும். இந்நிலையில் செயற்றிட்டத்தின் இறுதி அறிக்கையும் தயாரிக்கப்படும்.

பாடசாலை அதிபர் ஒரு செயற்றிட்ட முகாமையாளர் என்ற வகையில் ஆற்றவேண்டியதொரு மிகப் பிரதானமான கருமம் செயற்றிட்டத்திற்கான தடைகளை வெற்றி கொள்ளல் ஆகும். செயற்றிட்டத்திற்கான தடைகள் வளங்கள் (Money and Resource) நேரம் (Time) தரம் (Quality) என்பனவற்றாலே பெரிதும் ஏற்டுகின்றன எனலாம். செயற்றிட்டத்திற்கான மிகவும் முக்கியமான இம்மூன்று காரணிகளையும் பொருத்தமாக ஒன்றிணைப்பதிலேயே செயற்றிட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது.

பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டங்களில் ஏற்படும் தடைகள் பற்றி நோக்கினால் அது பின்வருமாறு அமைகின்றது.

பாடசாலைகளில் புதிய புதியச் செயற்பாடுகளை உருவாக்கி நடைமுறைபடுத்தும் போது அவை பெரும்பாலும் பாடசாலையின் நாளாந்த கலைத்திட்டச் செயற்பாடுகளின் தரநிலையில் குறைவினை பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. ஆசிரியர்கள் செயற்றிட்டங்களில் கூடுதல் அக்கறை செலுத்தும் போது மிகக் குறைவான எண்ணிக்கையுள்ள மாணவர்களின் கற்றல் நலன்கள் கவனத்திற் எடுக்கப்பட்டு, கூடியளவு மாணவர்களின் கற்றல் நலன்கள் புறக்கணிக்கப்படும் அபாயம் ஏற்படலாம், இந்நிலையில் பாடசாலையின் பண்புதரம் பாதிக்கப்படலாம். உதாரணமாக கணிதபாடத்தில் அடைவுமட்டம் குறைந்த விசேடதேவையுள்ள மாணவர்களுக்கான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஆசிரியர்கள் செயற்றிட்டத்தில் முழுக்கவனத்தையும் செலுத்தும் நிலை ஏற்பட்டால் ஏனைய சாதாரண மாணவர்களின் கற்றல் நலன் பாதிக்கப்படலாம். ஆகவே இங்கு நாளாந்தச் செயற்பாடுகளுக்கும் செயற்றிட்ட செயற்பாடுகளுக்குமிடையே ஒரு சமநிலையைப் பேணவேண்டிய தேவை உருவாகின்றது. இச் சமநிலையை பேணவேண்டிய பொறுப்பு பாடசாலை அதிபருடையதாகும்.

**செயற்றிட்டம் என்பது ஒருவரால் தயாரிக்கப்பட்டு, அதில் மற்றவர்களை ஈடுபடுத்தி அல்லது திணித்து செயற்படுத்தப்படும் ஒன்றல்ல. மாறாக ஒரு செயற்றிட்டத்தின் திட்டமிடல் நிலை தொடங்கி அதன் இறுதி அறிக்கை வெளியிடப்படும் வரை எல்லோரினதும் பற்குபற்றுதலும் ஒத்துழைப்பும் மிகவும் வேண்டப்பட்டதான ஒரு செயற்பாடாகும்.**

பாடசாலை செயற்பாடுகள் தொடர்பாக முன்வைக்கப்படும் விமர்சனங்களில் இன்று அதிகமாக முன்வைக்கப்படும் ஒரு கூற்று "ஆசிரியர்களுக்கு சுமை அதிகமாகி விட்டது" என்பதாகும். ஆசிரியர்களுக்கான சுமை அதிகமாகிவிட்டது என்ற பரவலான விமர்சனங்களுக்கிடையே புதிய புதிய செயற்றிட்டங்களை

உருவாக்கி நடைமுறைப்படுத்துவதென்பது அதிபருக்குள்ள மற்றுமொரு தடையாகும். ஆனால் ஆசிரியர்கள் செயலாற்றும் நேரத்திற்கும், அவர்களுடைய செயற்றிட்டங்களுக்குமிடையில் ஒரு சமநிலை பேணமுடியுமாயின் இவ்வாறான விமர்சனங்களிலிருந்து சற்று விடுபட முடியும். அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) பாடசாலைகளில் செயற்படுத்தும் செயற்றிட்டங்களில் பங்குகொள்ளும் ஆசிரியர்களுக்கு மேலதிக கொடுப்பனவொன்றை வழங்குகின்றது. இந்நிலையில் ஆசிரியர்களின் வேலை நேரத்திற்கும் பெறும் மேலதிக ஊதியத்திற்கும் இடையில் ஓரளவு சமநிலை ஏற்படுகின்றது.

> பாடசாலைகளில் புதிய புதியச் செயற்பாடுகளை உருவாக்கி நடைமுறைபடுத்தும் போது அவை பெரும்பாலும் பாடசாலையின் நாளாந்த கலைத்திட்டச் செயற்பாடுகளின் தரநிலையில் குறைவினை பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. ஆசிரியர்கள் செயற்றிட்டங்களில் கூடுதல் அக்கறை செலுத்தும் போது மிகக் குறைவான எண்ணிக்கையுள்ள மாணவர்களின் கற்றல் நலன்கள் கவனத்திற் எடுக்கப்பட்டு, கூடியளவு மாணவர்களின் கற்றல் நலன்கள் புறக்கணிக்கப்படும் அபாயம் ஏற்படலாம். இந்நிலையில் பாடசாலையின் பண்பு, தரம் பாதிக்கப்படலாம்.

செயற்றிட்ட முகாமையாளர் என்ற வகையில் அதிபர்கள் எதிர்நோக்கும் தடை செயற்றிட்டங்களின் தரத்தைப் பேணிக் கொள்ளலாகும். பெருமளவு நிதி, நேரம், வளங்கள் என்பன பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படும் சில செயற்றிட்டம் தொடர்பான ஒரு தடையாக அமைலாம். பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் சில செயற்றிட்டங்கள் பாடசாலை நேரத்திற்கு புறம்பான நேரத்தில் (after school) மேற்கொள்ள வேண்டி ஏற்படலாம். இவ்வேளையில் இச் செயற்றிட்ட செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் மாலை நேரத்தில் விளையாடுவதிலிருந்து தடுக்கப்படலாம், அல்லது பொழுதுபோக்கு அம்சங்களில் கவனஞ் செலுத்தும் நேரம் குறைக்கப்படலாம். இதனால் மாணவர்களின் சமநிலை ஆளுமை விருத்தியில் தாக்கம் ஏற்படலாம். ஏற்கனவே மாலைநேர ரியூசன் வகுப்புக்களினால் ஏற்பட்டுள்ள மாணவரின் சமநிலை ஆளுமை விருத்தி மேலும் பாதிக்கப்படும் அபாயம் உண்டு. ஆகவே செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது மாணவர்களின் புறக்கிருத்தியச் செயற்பாடுகளிலும் அதிபர் கவனஞ் செலுத்துதல் அவசியம்.

## செயற்றிட்ட முகாமையாளராக அதிபர் கொண்டிருக்க வேண்டிய திறன்கள்

பாடசாலையின் செயற்றிட்டங்களை நெறிப்படுத்துபவர் என்றவகையில் பாடசாலை அதிபர் செயற்றிட்ட செயற்பாடுகளுக்கென பின்வரும் விசேட திறன்களை தம்மிடத்தே வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

1. தொடர்பாடல் திறன்கள்
2. ஒழுங்கமைக்கும் திறன்கள்
3. பாதீடும் திறன்கள் (Budgeting skils)
4. பிரச்சினை தீர்க்கும் திறன்கள்
5. சமரசப்படுத்தும் திறன்கள்
6. தலைமைத்துவ திறன்கள்
7. குழுவாக்கும் திறன்கள்

மேற்கண்ட திறன்கள் சிறப்பாக காணப்படும் நிலையிலேயே அதிபர் ஒரு சிறந்த செயற்றிட்ட முகாமையாளராக பரிணமிக்க முடியும். செயற்றிட்ட முகாமையாளர் ஒருவர் விருத்தியாக்கிக் கொள்ள வேண்டிய அறிவு புலங்கள்.

செயற்றிட்ட முகாமையாளர் ஒருவர் தம்மை விருத்தியபக்கிக் கொள்வதற்கும், சிறப்பான செயற்றிட்ட முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கும் பின்வரும் அறிவு புலங்களில் (Knowledge Areas) கவனஞ் செலுத்துதல் வேண்டும். அவையாவன,

1. ***செயற்றிட்ட ஒருங்கிணைப்பு முகாமைத்துவம் (Project Integration Managenent)*** செயற்றிட்ட ஒருங்கிணைப்பு முகாமைத்துவம் என்பது செயற்றிட்டத்திற்கான சகல வளங்களையும், செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பதாகும். செயற்றிட்ட திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், மாற்றங்களை முகாமைத்துவம் செய்தல் என்பவற்றுக்கிடையே பலமான இடைதாக்கத்தினை ஏற்படுத்துதலே ஆகும்.

2. ***செயற்றிட்ட வாய்ப்பு முகாமைத்துவம் (Project scope Management)*** செயற்றிட்ட வாய்ப்பு முகாமைத்துவம் என்பது செயற்றிட்டமொன்று வெற்றிபெறக்கூடிய சாத்தியங்கள் பற்றிய அறிவாகும். செயற்றிட்டமொன்றிற்கு என்னென்ன வளங்களை உட்படுத்துவதன் ஊடாக எவ்வாறான வெற்றியீட்டினால் பெற்றுக் கொள்ளலாம் என்பதாகும்.

3. ***செயற்றிட்ட நேர முகாமைத்துவம் (Project Time Manegement)***

   செயற்றிட்டமொன்றின் செயற்பாடுகளின் காலத்தை எவ்வாறு தீர்மானித்தல், எவ்வாறு நெறிப்படுத்தல், எவ்வாறு துரிதப்படுத்தல் என்பதாக செயற்றிட்டநேர முகாமைத்துவம் அமைகின்றது. செயற்றிட்டத்திற்கு மிகவும் அவசியமானது நேர முகாமைத்துவம் ஆகும்.

4. செயற்றிட்ட கிரய முகாமைத்துவம். *(**Project Cost Mangement**)*
ஒரு செயற்றிட்டத்தின் ஆரம்பம் தொடங்கி இறுதி வரை அதற்கான கிரயத்தினை கிரகிப்பது அவசியமானதாகும், செலவைவிட இலாபம் அல்லது பயன் அதிகரிக்கும் விதத்தில் செலவை திட்டமிடல், பாதீடு தயாரித்தல், கட்டுப்படுத்தல், கணக்கிடல் என்பன செயற்றிட்ட கிரய முகாமைத்துவத்தில் அடங்குகின்றது.

5. செயற்றிட்ட தர முகாமைத்துவம் *(**Prokect Quality Management**)*
செயற்றிட்டத்தின் திட்டமிடல் நிலை தொடங்கி இறுதிநிலை கட்டுப்படுத்தும் செயற்பாடே செற்றிட்ட தரமுகாமைத்துவம் ஆகும். அத்துடன் ஒரு செயற்றிட்டத்தின் தரத்தை தீர்மானித்தலும் உறுதிப்படுத்தலும் இதனுள் அடங்குகின்றன.

6. செயற்றிட்ட மனித வள முகாமைத்துவம். *(**Projcet Human Resource Mangement**)*
செயற்றிட்ட மனிதவள முகாமைத்துவம் என்பதனுள் மனிதவள தெரிவு, நெறிபடுத்தல், கண்காணித்தல் முரண்பாடுகளை தீர்வு செய்தல், செயலாற்றுகை மதிப்பீடு என்பன அடங்குகின்றன.

7. செயற்றிட்ட தொடர்பாடல் முகாமைத்துவம்.
செயற்றிட்டத்திற்கான தகவல்களை வழங்குதல் தகவல்களைப்பெறல், அறிக்கைப்படுத்தல், நிர்வாகம் என்பன செயற்றிட்டம் தொடர்பாடல் முகாமைத்துவம் என்பதனுள் அடங்குகின்றது.

8. செயற்றிட்ட இடர் முகாமைத்துவம். *(**Project Risk Management**)*
செயற்றிட்டத்தின் தடைகளை கண்டு கொள்ளல், தடைகளை பகுப்பாய்வுசெய்தல், செயற்றிட்டத்தை பாதிக்கும் வெளியகக் காரணிகளை வெற்றி கொள்ளல் என்பன இடர்முகாமைத்துவம் என்பதனுள் அடங்குகின்றது.

மேற்கண்ட அறிவுப் புலங்களில் உரிய கவனத்தைச் செலுத்தி அதிபர்கள் தனது செயற்றிட்ட முகாமைத்துவ திறனை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

பாடசாலையினுள் சிறந்த பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் செயற்றிட்டங்களை சிறப்பாக முகாமைத்துவம் செய்தல் என்பது அதிபர்களின் சிறப்பானதொரு கடமையாகும். இதன்மூலம் பெறுமதியான நேரத்தையும், பெறுமதியான நிதியையும், பெறுமதியான வளத்தையும் பாடசாலை விருத்திக்கு செலவிட்டோம் என்றதொரு நிறைவு கொள்ள முடியும்.

**உசாத்துணை**

1. Kim Hedmen (2004) BPB Publications B.14 Connaaght Place, NewDelhi

---

"மனிதனின் அறிவு என்பது அவனது பொருளுற்பத்திக்கான செயலையே முதன்மையாகச் சார்ந்திருக்கிறது. அதன் மூலமாகவே அவன் இயற்கையின் புதுமை நிகழ்வுகளையும், தன்மைகளையும் விதிமுறைகளையும் படிப்படியாக அறிந்து கொள்கிறான். மேலும் இயற்கைக்கும் தனக்கும் இடையேயுள்ள உறவுகளையும் மனிதன் தன் நடைமுறையின் மூலம் புரிந்து கொள்கிறான்"

**-மாசேதுங்-**

*****

வளர்ச்சி (படிமுறை வளர்ச்சி, பரிணாமம்) பற்றிய இரண்டு அடிப்படையான (அல்லது இரண்டு சாத்தியமான அல்லது வரலாற்று ரீதியாகக் காணத்தக்க) கருத்தியல்களாவன: ஒன்று இறக்கம் அல்லது ஏற்றமான வளர்ச்சியாகப் பார்ப்பது. இது திரும்பத் திரும்ப நிகழ்வதாகப் பார்க்கப்படுகிறது. மற்றது இதற்கு நேர்மாறானது. இது எதிர்மறைகளின் (Opposite- எதிரானவை) ஒற்றுமையாக வளர்ச்சியைப் பார்ப்பது. (ஒரு பொருள் இரண்டு எதிரும் புதிருமான எதிர்மறைகளாக உடைவதாகவும், அவற்றுக்கு இடையிலான தலைகீழ் உறவாகவும் வளர்ச்சியைப் பார்ப்பது)

**- லெனின்-**

*****

"மனிதப் பண்பியல் துறைகளான வரலாற்றியல், தொல்பொருளியல், மெய்யியல், அரசியல், மொழியியல் முதலியவற்றுடன், சமூகவிஞ்ஞானத் துறைகளான மானிடவியல், சமூகவியல், உளவியல், அரசியல், பொருளியல், மக்கள் பண்பாட்டியல் என்பனவும் இலக்கிய ஆய்வுக்கு இன்று இன்றியமையாதன. தனித்துவம் சார்ந்ததும் இயங்கும் இப்பண்பே நவீன இலக்கியத் திறனாய்வை முற்கால இலக்கிய ஆய்வுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது"

**-பேரா.க. கைலாசபதி-**

*****

# கல்வி வளர்ச்சியில் பயன் வழிவாத அணுகுமுறை

இலங்கையின் வேலைப்படையானது கைத்தொழில்களை மேம்படுத்தவும், பலவீனப்படுத்தவும் போதியளவில் திறன்கள் அற்றதாக காணப்படுகிறது. அரசினால் நடத்தப்படும் பல்வேறு திறன் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பிரதானமாக நிரம்பல் தொடர்பானதாக உள்ளன. ஆகையால் அவை கைத்தொழில்களுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான திறன்களைக் கொண்டதாக இல்லை. தனியார் துறைக்குத் தேவையான திறன்களை வழங்கக் கூடியளவிற்கு தொழில்பயிற்சி முறைமையானது மீள் கட்டமைக்கப்படல் வேண்டும். ஏனெனில் இறுதியாகத் தொழிலை வழங்குபவர்களாக இருக்கப் போகின்றவர்கள் தனியார் துறையினரேயாவர்.

மா.செல்வராஜா
கல்வித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

கல்வி நோக்கங்கள் வாழ்க்கைச் சூழ்நிலையுடன் தொடர்புடையன. அவை உண்மையான சமூகச் சூழ்நிலைக்குப் பொருத்தமானதாக அமைய வேண்டும். சமூகத்தைப் பொறுத்து பௌதீக, பொருளாதார தேவைகள், காலத்துக்குக் காலம், இடத்துக்கு இடம், நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. கல்வியின் நோக்கங்கள் மக்களின் சமூக, உளவியல், தேவைகள் செயற்பாடுகள், கல்வி நோக்கங்களின் தன்மை என்பன காலத்தின் தேவையைப் பிரதிபலிக்கும். "கல்வியியலாளர் அனைத்துக் கல்விக் கொள்கைகளையும் பூரணமாகக் கற்றிருந்தாலும் அவர் காலம், இடம் என்பவற்றிலிருந்து தப்ப முடியாது" எனக் கல்வியியலாளர் இஸாக் என்பவர் குறிப்பிடுகிறார். மாணவர்கள் சமூகத்தின் ஓர் அங்கத்தவர்கள். ஆதலால் அவர்களைப் பயனுள்ள ஒரு சமூக அங்கத்தவர்களாக உருவாக்கி, திரும்பச் சமூகத்திடமே ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு கல்விக்குள்ளது. அதனால் சமூக வாழ்க்கைக்கு ஏற்றதாக கல்வி நோக்கங்கள் அமைய வேண்டும்.

பண்டையக் காலத்திலிருந்தே கல்வி சமயத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக விளங்கி வந்தது. இலங்கையில் பௌத்த, இந்து நிறுவனங்கள் சமூகத்தில் சிலருக்கு மட்டும் கல்வியை வழங்கி வந்தன. போர்த்துக்கீசர் காலத்தில் பரிஸ் பாடசாலைகள் என்றழைக்கப்பட்ட கிராமப் பாடசாலைகளும், பட்டினங்களில் கல்லூரிகளும் அமைக்கப்பட்டன. சமயக் கல்வியுடன், ஆரம்ப இரண்டாம் நிலைக் கல்வியும் அங்கு வழங்கப்பட்டன. இக்காலத்தில் கல்வியின் நோக்கம் பிரதானமாக ஆட்சியாளர்களது நோக்கத்தைப் பூர்த்தி செய்வதாக இருந்ததே ஒழிய தேவைகளை நிறைவு செய்வதாக இல்லை.

ஒல்லாந்தர் காலத்தில் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. ஒல்லாந்து, அரசாங்கம் பாடசாலைகள், அதிபர்கள், ஆசிரியர்கள், விதிமுறைகளைத் தயாரித்தது. இதே போல் பிரித்தானியர் காலத்திலும் ஆட்சியாளர்களது எதிர்பார்ப்பிற்கு ஏற்றதாகவே கல்வியைக் கையாண்டதைக் காணலாம். எனவே அந்நியர் ஆட்சிக் காலத்தில் அவர்களது நோக்கத்திற்காகத்தான் கல்வி இருந்ததே தவிர சமூகத்தின் தேவைகளை கருத்தில் கொண்டதாக இருக்கவில்லை. 1945ல் தான் அனைவருக்கும் இலவசக்கல்வி என்ற திட்டம் கலாநிதி C.W.W. கன்னங்கரா அவர்களால் கொண்டு வரப்பட்டது இது சமூகத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்ட இலங்கையர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாக அமைந்தது.

ஆயினும் சுதந்திரத்தின் பின் சமூகத்தின் தேவைகள், சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், வேலைவாய்ப்புப் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு கல்வி திட்டமிடப்படவில்லை என்றே கூறலாம். அதன் விளைவாக கலைத்திட்டத்தில் எவ்வித மாற்றமும் இன்றி ஏறக்குறைய கால்நூற்றாண்டு காலம் கல்விச் செயன்முறை தொடர்ந்தது. இது இலங்கையில் கல்விக்கும் தொழில் வாய்ப்பிற்கும் இடையே தொடர்பில்லா நிலையைத் தோற்றுவித்து, சமூகத்தில் பிரச்சினைகளை அதிகரித்தது. 1970 களில் தென்னிலங்கையில் அரசிற்கு எதிரான ஒரு பெரும் புரட்சியை ஜே.வி.பியினர் தோற்றுவித்தமை இத்தகைய விளைவுகளில் ஒன்று. அந்நிய நாட்டுப்படைகள் புரட்சியை அடக்குவதற்காக வரவழைக்கப்பட்டன. பல ஆயிரம் இளைஞர்களது உயிர்கள் பறிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து இளைஞர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சியாக இளைஞர்கள் மீதான ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது.

இளைஞர்கள் புரட்சியில் ஈடுபட்டமைக்கான காரணங்கள் ஆராயப்பட்டன. இவ்வாணைக்குழு அறிக்கையின் மூலமே கல்வி அமைச்சர் முதற்கொண்டு கல்வி மான்கள் மற்றும் நாட்டின் அபிவிருத்தியில் அக்கறையுள்ளோர் அனைவருக்கும் ஒரு விழிப்பு ஏற்பட்டது எனலாம்.

இதன் பின்னே பொதுக்கல்வித் திட்டத்தில் ஒரு பிரதான மாற்றம் புகுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த கணிதம், ஒருங்கிணைந்த விஞ்ஞானம், சமூகக் கல்வி முதலிய பாடங்களும், தொழில் முன்னிலைப் பாடங்களும் பொதுக் கலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டன.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பொதுக்கல்வியில் ஏற்படுத்தப்பட்ட முக்கிய மாற்றமாக இதனைக் கொள்ள முடியும். கிராமப்புற மாணவர்களும் கணிதம், விஞ்ஞானம் போன்றவற்றைக் கற்கக் கூடிய வாய்ப்பு இப்பொதுக் கலைத்திட்ட அறிமுகத்தின் போதுதான் ஏற்பட்டது. இம்மாற்றித்தினூடேதான் கல்வி மீதான பயன்வழிவாத அணுகுமுறை இலங்கையின் கல்வி மறுசீரமைப்பில் பிரயோகத்திற்கு வருவதை அவதானிக்கலாம்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பொதுக்கல்வியில் ஏற்படுத்தப்பட்ட முக்கிய மாற்றமாக இதனைக் கொள்ள முடியும். கிராமப்புற மாணவர்களும் கணிதம், விஞ்ஞானம் போன்றவற்றைக் கற்கக் கூடிய வாய்ப்பு இப்பொதுக் கலைத்திட்ட அறிமுகத்தின் போதுதான் ஏற்பட்டது. இம்மாற்றித்தினூடேதான் கல்வி மீதான பயன்வழிவாத அணுகுமுறை இலங்கையின் கல்வி மறுசீரமைப்பில் பிரயோகத்திற்கு வருவதை அவதானிக்கலாம்.

நடைமுறைச் சூழலில் தற்காலப் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டதே பயன்வழிவாதமாகும். தத்துவார்த்த விளக்கங்களை முன்வைக்கும் பல்வேறு கோட்பாடுகளில் அண்மைக்காலத்தில் வளர்ச்சியடைந்த கோட்பாடே இது எனலாம். இது அமெரிக்கத் தத்துவஞானிகளான ஜோன்.டியூவி.ஸீ.எஸ் பியர்ஸ் , வில்லியம் ஜேம்ஸ், சில்லர் ஆகியோரின் கருத்துக்களின் வெளிப்பாட்டால் உருவாக்கம் பெற்றதாகும். இவர்களுள் ஜோன் டியூவி பிரதானமானவராவார். இவரது கருத்துக்கள் பயன்பாட்டு வாதத்துக்கு நடைமுறைசார்ந்த தெளிவான விளக்கமளித்தன எனலாம். 'மனிதரை இயற்கையில் இருந்து பிரிக்க முடியாது. மனிதருக்கும் இயற்கைக்கும் உள்ள இடைத் தொடர்பே அதற்கான அடிப்படைக் காரணியாகும். மனிதர் சூழலை உருவாக்குகிறார். சூழலானது மனிதரை வடிவமைக்கிறது. அவர்களது வாழ்வு பல்வேறு அனுபவங்களுடன் செயலில் வளம் பெறுகிறது. அவன் தனது செயற்பாடுகளை ஆக்கத்திறனான விவேகத்தால் ஒழுங்கமைத்துக் கொள்கிறார்கள். அது வாழ்க்கைக்கான யதார்த்தமாகிறது. இயற்கை உலகிற்கு அப்பால் மனித அனுபவற்களுக்கு மேலாக உண்மையைத் தேடுவது பயனற்றது' எனக் குறிப்பிடுகிறார் ஜோன் டியூவி

பயன் வழிவாதத்தின் படி கல்வியானது உயிரியல், சமூகச் சூழலில் பிள்ளை தனது தேவையைப் பூர்த்தி செய்ய உதவியளிக்க வேண்டும். அதன்படி பிள்ளை நவீன சமூகத்துக்கு அங்கத்தவராக வளர்ச்சியடைய வேண்டும். பிள்ளைக்கு தற்காலப் பிரச்சினையை வினைநுட்பத்துடன் தீர்க்கக் கூடியதான நுட்பத்தை கொடுத்தல் வேண்டும். பயன்வழிவாதம் உண்மை அனுபவங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. எனவே கல்வியின் நோக்கம் பிள்ளையை நல்ல பயன்வழிவாதியாக ஆக்குவதாகும். பயன்வழிவாதத்தின் படி பிரச்சினைக்கான தீர்வு முக்கியம் பெறுகின்றது. ஆசிரியரும் இத்தகைய மனப்பாங்கை பிள்ளையிடம் வளர்க்க வேண்டும். ஒவ்வொரு பரிசோதனையையும் முழுமையாக்க கருதும் பயன்வழிவாத ஆசிரியர் மாணவர்களுக்குப் பிரச்சினையைக் கூறி அவற்றிற்கான தீர்வுகளை அவர்களே கண்டறிய வழிகாட்டுகின்றார். பயன்வழிவாத ஆசிரியர் அறிவைப் போதிப்பதை விட செயற்பாட்டையே போதிக்கிறார். இவ் வகையில் பயன்வழிவாதி சோக்கிரதீசைப் பின்பற்றுகிறார். "சோக்கிரதீஸ் தனது மாணவர்களுக்கு சிந்தித்து கற்பித்தார். தாமாக செயற்படக் கற்பித்தார் அறிவதை விட செயலாற்றக் கற்பித்தார்" இந்தப் பயன்பவழிவாதக் கருத்துக்களின் அடிப்படையில்தான் இன்று இளைஞர்கள் எதிர்நோக்கும் சமூகப் பொருளாதாரக் கல்விப்பிரச்சினைகள் எதிர்நோக்கப்படல் வேண்டும்.

தற்கால இளைஞர்களினதும், எதிர்கால இளைஞர்களினதும் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டே அவற்றைத் தீர்க்கும் முகமாக 1999ல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தமும் இதற்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டவற்றை விட பல அம்சங்களை உள்ளடக்கியது. மூன்று பிரதான பிரிவாக இச்சீர்திருத்தத்தைக் குறிப்பிடலாம்.

1. பொதுக் கல்வி
2. பல்கலைக்ககைக் கல்வி
3. தொழில் நுட்பக் கல்வி

எனும் மூன்று பிரிவுகளாக அண்மைய கல்விச் சீர்திருத்தம் வெளிவந்தது.

பொதுக் கல்வி சீர்திருத்தம் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்தரக்கல்வி என மூன்றாக நோக்கப்படலாம். 'ஆரம்பக்கல்வி நில்லயாக அமையும் ஆண்டு 1-5 ஆண்டுகளாகும். இது ஒரு பிள்ளையின் வளர்ச்சிக்குரிய பருவமாகும். இக்காலத்திலேயே ஒரு பிள்ளையின் உடல், உள மனக்கிளர்ச்சி சார்ந்த சமூக அபிவிருத்திக்கான அத்திவாரம் இடப்படுகிறது. விடயங்களைத்

தாமாகவே கண்டு பிடிக்கவும், தேவையான போது விடயங்களை தம்முள்ளே கலந்துரையாடுவதற்கும், எண்ணங்களையும், கருத்துக்களையும் எடுத்துரைக்கவும் மாணவருக்குள்ள சுதந்திரம் ஒரு வளரும் பிள்ளையினுடைய ஆளுமை, ஆக்கத்திறன், ஒத்துழைப்பு பண்பு ஆகியவற்றின் அபிவிருத்திக்குச் சாதகமாக அமையும். இந்த நிலைக் கல்வியானது விளையாட்டு, செயற்பாட்டு முறைசார்ந்த கல்வி ஆகியவற்றின் ஒரு கூட்டாக இருக்கும்" புதிய கல்விச் சீர்திருத்த அறிக்கையின் மேற்படி வாசகங்கில் பயன்வழிவாதக் கருத்துக்கள் பிரதிபலிப்பதைக் காணலாம்.

பொதுவாக நோக்கும் போது பாடசாலைக் கல்வியில் இடம் பெற்ற கல்விச் சீர்திருத்தம் முன்னரை விட செயல்சார்ந்ததாகவும் மாணவர் தாமாக இயங்கிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடிய வகையிலும் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றைப் பாடசாலை மாணவர்களிடம் வளர்த்து, எதிர் காலத்தில் தாம் எதிர்நோக்கக் கூடிய சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய ஆளுமையை வளர்க்கக் கூடியதாகவும் இருந்ததைக் காணலாம்.

பயன்வழிவாத அணுகுமுறை புதிய கல்விச் சீர்திருத்தத்தில் காட்டும் செல்வாக்கிற்கு சிரேஷ்ட இடைநிலைக் கல்வி தொடர்பான சில அம்சங்கள் உதாரணமாகும். "சாதாரண தரத்தின் முடிவுரை அடிப்படைத் தகைமைகளை விருத்தி செய்வதே கல்வியின் நோக்கமாகும். முதல் மொழி, ஆங்கிலம், கணிதம், சமயம், சமூகக்கல்வி சூழல், விஞ்ஞானங்கள், தொழிநுட்ப தொழில்துறைக்கல்வி, அழகியற்கல்வி எனும் பாடங்களை உள்ளடக்கியதாக சாதாரண தரம் அமைகின்றது. தொழில் நுட்ப தொழில்துறை கல்விக்கும் அழகியற் கல்விக்குமுரிய பாடங்களைத் தெரிவு செய்யும் போது கொடுக்கப்பட்ட பல விருப்புப் பாடங்களுள் மாணவர் தாம் விரும்பியவற்றைத் தெரிவு செய்யலாம். தொழிற்துறைக் கல்விக்குரிய விருப்புப் பாடங்கள் விவசாயம், உணவு பதனிடல் ஆகியன உட்பட நாட்டின் இன்றையக் கைத்தொழில் சேவைத் தேவைகளைச் சமாளிப்பதற்குத் தக்கனவாக இருக்கும். அழகியற் கல்வியில் கட்புல வரைதற் கலைகள், நடிப்புக்கலைகள், இலக்கியம் ஆகியன இருக்கும் இந்நிலையில் கற்கக்கற்றல் என்பதை வலியுறுத்தத் திட்டங்கள் இடம் பெறும்.

உயர் தரத்தைப் பொறுத்த மட்டில் செயல் மூலம் கற்றல் என்ற பயன்வழிவாத கருத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. செயற்றிட்டக் கற்றல் மூலம் வகுப்பறையில் கற்ற, கொள்கை சார்ந்த அறிவினை மெய்ம்மையான பிரச்சினைகளுக்குப் பயன்படுத்தும் வாய்ப்பு செயற்றிட்டங்கள் மூலம் கிடைக்கும். இத்துடன் சமூக உணர்வும் தூண்டப்படும்.

பொதுவாக நோக்கும் போது பாடசாலைக் கல்வியில் இடம் பெற்ற கல்விச் சீர்திருத்தம் முன்னரை விட செயல்சார்ந்ததாகவும் மாணவர் தாமாக இயங்கிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடிய வகையிலும் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றைப் பாடசாலை மாணவர்களிடம் வளர்த்து, எதிர்காலத்தில் தாம் எதிர்நோக்கக் கூடிய சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய ஆளுமையை வளர்க்கக் கூடியதாகவும் இருந்ததைக் காணலாம்.

பல்கலைக்கழக கல்விச் சீர்திருத்தத்திலும் முக்கிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளமையை நோக்கலாம்.

* பல்கலைக்கழகப் பட்டதாரிகளை உயரிய பயிற்சியளிக்கப்படக் கூடியவர்களாகவும், சிறப்பாகவும் விரைவாகவும் அறிவினைப் பெறக் கூடியவர்களாகவும் உருவாக்குதல்.
* அவர்களை சுயமாக இயங்கி கற்பவர்களாக்குதல்.
* தன்நம்பிக்கையை வளர்த்து, புதிய பிரச்சினைகளை எதிர்கொள்ளத்தக்க தைரியமுள்ளவர்களாக்குதல்.
* பல்வேறு திறன்கள் பெற்றவர்களாக்குதல்.
உதாரணம் : தொடர்பாடல் திறன், தகவல்திறன், முகாமைத்துவ திறன், ஆங்கில மொழி உபயோகம், தொழிநுட்பம்.
* கல்விப் போதனைகளைச் செயற்பாடுகளுடன் இணைத்தல்
செயற்பாடுகள், களவேலை (*Field work*) செயற்றிட்ட ஒப்படைகள், செயற்பாட்டுப் பயிற்சிகள், புதியன கண்டறிதல், குழுவேலை, விவாதம் சிந்தனைத்திறன்களை மேம்படுத்தல் முதலிய கருத்துக்கள் இப்பொழுது பல்கலைக்கழகத் திட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளன. முழு ஆண்டை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய முறை நீக்கப்பட்டு புதிய தவணைமுறை (Semester System) புகுத்தப்பட்டுள்ளதால் மதிப்பீட்டு முறையிலும் புதிய மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளன. கல்விச் சீர்திருத்தத்தின் இன்னொரு பிரதான அம்சம் தொழில்நுட்பக்கல்வி சீர்திருத்தமாகும். 1994ம் ஆண்டு மேன்மை தாங்கிய ஜனாதிபதி புதிய பாராளுமன்றத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போது தொழிநுட்பக் கல்வி, தொழிற்பயிற்சிக்கல்வி சீர்திருத்தம் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டார்.

"இலங்கையின் வேலைப்படையானது கைத்தொழில்களை மேம்படுத்தவும், பலவீனப்படுத்தவும் போதியளவில் திறன்கள் அற்றதாக காணப்படுகிறது. அரசினால் நடத்தப்படும் பல்வேறு திறன் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பிரதானமாக நிரம்பல் தொடர்பானதாக உள்ளன. ஆகையால்

அவை கைத்தொழில்களுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான திறன்களைக் கொண்டதாக இல்லை. தனியார் துறைக்குத் தேவையான திறன்களை வழங்கக் கூடியளவிற்கு தொழில்பயிற்சி முறைமையானது மீள் கட்டமைக்கப்படல் வேண்டும். ஏனெனில் இறுதியாகத் தொழிலை வழங்குபவர்களாக இருக்கப் போகின்றவர்கள் தனியார் துறையினரேயாவர்."

இன்று தனியார் துறைக்குப் போதிய அழுத்தமும் ஊக்குவிப்பும் வழங்கப்படுவதால் தனியார் துறைக்குத் தேவைப்படுகின்ற திறன்களை வழங்க வேண்டியது தொழில்நுட்பத்துறைக்குரிய பணியாக உள்ளது. இதற்காக ஜனாதிபதி தலைமையில் பணிக்குழு அமைக்கப்பட்டது. பல்வேறு அமைச்சுக்களிலிருந்து பிரதிநிதித்துவம் பெறக்கூடிய வகையில் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஏனெனில் பொதுக்கல்வி, பல்கலைக்கழகக்கல்வி போலல்லாது தொழில்நுட்பக் கல்வியும், பயிற்சியும், தொடர்புபடுகின்றன. தொழில்நுட்பக்கல்வியுடன் தொடர்புடைய ஆணைக்குழு (TVEC) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக்கான திணைக்களம், தொழில்நுட்பபயிற்சி அதிகார சபை (VTA) தேசிய தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் (NITESL) போன்றவை ஓர் அமைச்சின் கீழ்க்கொண்டு வரப்பட்டு கொள்கை உருவாக்கம், திட்டமிடல், தொழிற்கல்வி, தொழிற்பயிற்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாகத் தொழில்நுட்பக்கல்வி சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. கொள்கைத்திட்டமிடலும், இணைப்பாக்கமும், தொழில்நுட்ப நிறுவனங்களின் முகாமைத்துவ அபிவிருத்தி வளப்பங்கீடு, தொழிற்கல்வியின் சமூக மதிப்பை உயர்த்தல், பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை பரவலாக்கள், தேசிய தொழிற்கல்வி நிறுவனத்தை மீள் ஒழுங்கமைத்தல், திறன்தகமைகளை மேம்படுத்தல், தொழில் வழிகாட்டல் ஆலோசனை கூறல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக தொழில்நுட்பக் கல்வி சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்பொழுதும் அத்திட்ட அமுல்படுத்தல் தொடர்பான தொடர் ஆய்வுகளும், மாற்றங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்காலத்தில் எதிர்கொள்ளக் கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையக்கூடிய வகையில் இச் சீர்திருத்தம் முன்னெடுக்கப்படுவது ஒரு சிறப்பான அம்சமாகும். இது பயன்வழிவாத அணுகுமுறையில் பல்வேறு வாய்ப்புக்களையும், சந்தர்ப்பங்களையும் காட்டுகின்றது.

சீர்திருத்த முன்மொழிவுகளை அமுல்படுத்துவதில் சிரமங்கள், வளப்பற்றாக்குறை போன்றன காணப்படுகின்ற நிலையுண்டு . இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு முன்மொழிவுகள் சிறப்பாக அமுல்படுத்தப்படுகின்ற நிலையில் நாடு எதிர்நோக்கும் இளைஞர் பிரச்சினைகள் காலப்போக்கில் தீர இடமுண்டு.

---

*'ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவியக்கங்களை உரை அவர் தம் உணவுப் பழக்க வழங்கங்களைக் கூர்ந்து நோக்க வேண்டும். உணவுப் பழக்க வழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச்சூழ்நிலை, வாழ்நிலத்தின் விளைபொருள்கள், சமூகப்படிநிலைகள், உற்பத்தி முறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொருத்து அமையும்'*

— பேரா.தொ.பரமசிவம் —

*****

*'எழுத்தைத் தவிர வேறு சாதனங்களின் ஆட்சி அதிகமில்லாத அன்றைய கால எழுத்துக்கும், பல சாதனங்களில் எழுத்தும் ஒன்றாகிவிட்ட இன்றைய கால எழுத்துக்கும் வேறுபாடு நிச்சயம் உண்டு. அரசியல், சமுதாயம், பொருளாதாரம், கருத்தியல் மாற்றங்களோடு இந்தச் சாதனங்களின் பெருக்கத்தைக் கணக்கில் கொள்ள வேண்டும்'*

—பேரா ராஜ்கௌதமன் —

*****

# கல்விச் சமூகவியலும் சமூகமயமாக்கலும்

சமூகவியல் அறிகையில் ஏற்பட்ட ஒரு பிரதான வளர்ச்சி கோட்பாடுகளின் உரு வாக்கம். இவ்வகையில் உருவான கோட்பாடுகளின் முதற்கண் தொழிற் பாட்டுவாதம் சிறப்புப் பெறுகின்றது. எமில் துர்கைமின் எழுத்தாக்கங்களில் இருந்து தொழிற்பாட்டுவாதம் முகிழ்ந்தெழத் தொடங்கியது சமயம், கல்வி, கடம்பம் என்றவாறு சமூகத்தில் உள்ள நிறுவனங்களின் தொழிற்பாடு களையும் அவற்றின் வழியாக சமூகம் இயக்கங்கொள்வதையும் இந்த வாதம் விளக்கும். தொழிற்பாடுகளின் அடிப் படையாக சமூகம் நிலைபேறு கொண்டு நீடிப்பதை ரால்கொட்பார்சன் மேலும் விபரிக்கலானார்.

பேரா. சபா. ஜெயராசா
கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கல்விச் செயல்முறை பற்றிய தெளிவான புலக்காட்சியை ஏற்படுத்துவதற்கு கல்விச் சமூகவியல் ஆய்வுகள் துணை நிற்கின்றன. சமூகவியல் அறிவாரத்தின் முன்னோடிகள் என்ற பிரிவினில் கார்ல் மார்க்ஸ் (1818-83) மார்க்ஸ் வெபர் (1864-1920) எமில்துர்க்கைம் (1858-1917) ஆகிரோர் குறிப்பிடத்தக்கவர்கள். சமூக இருப்பையும், இயக்கத்தைம், அசைவையும் நெருக்குவாரங்களையும் தத்தமது அறிகைத் தளங்களில் நின்று இவர்கள் விளக்கலானார்கள்.

பொருண்மியத் தளத்தில் நின்று கார்ல் மார்க்ஸ் சமூகத்தை விளக்கலானார். ஒரு சமூகக்குழுவினர் பொருண்மிய வளங்களை தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருத்தலும் தமக்குச் சாதகமான முறையில் சட்டங்களையும், விழுமியங்களையும் உருவாக்குதலும் அவற்றால் எழும் நெருக்கடிகளும், அவற்றை மாற்றியமைப்பதற்கான விசைகளும் அவரால் விளக்கப்பெற்றன.

மார்க் வெபர் வினைப்பாட்டின் (Action) அடிப்படையில் சமூகத்தை விளக்கலானார். வினைப்பாடுகளின் அடிப்படையில் சமூக மாற்றம் நிகழ்வதாக அவர் விளக்கினார். எழுச்சிசார்ந்த வினைப்பாடு, மரபுசார் வினைப்பாடு, விழுமியம் மற்றும் தீர்மானித்தல் தொடர்பான பகுத்தறிவு சார்ந்த வினைப்பாடு , அறிவியல் நோக்குடைய வினைப்பாடு என்றவாறு அவர் பாகுபடுத்தி விளக்கினார். இறுதியாகக் குறிப்பிட்ட இந்த வினைப்பாட்டின் அடிப்படையிலேதான் தெளிந்த சமூக முன்னேற்றம் ஏற்படும் என்று குறிப்பிட்டார். வகுப்பு, அந்தஸ்து, கட்சி முதலாம் நிலைகளில் புரெட்டெஸ்தாந்து விழுமியங்களை அடியொற்றி அவர் சமூகத்தை விளக்கினார்.

சமூக ஒருங்கிணைவைப் பொறிமுறை நிலையிலும், சேதன நிலையிலும் எமில் துர்கைம் விபரித்தார். பொறிமுறை நிலையில் சமூக உறுப்பினர்களிடையே ஒப்புமைப்பண்புகளும், ஓரினப்பாங்கும் வலியுறுத்தப்படுவதன் வாயிலாக சமூக ஒருங்கிணைப்பு நிகழ்வதாகக் குறிப்பிட்டார். பூர்வீக சமூகங்களில் இந்த இயல்பு காணப்படும். நவீன சமூகங்கள் மிகவும் சிக்கல் பொருந்தியவை. தொழிற்பிரிவுகள் மேலோங்கியுள்ளன. தனிமனித வேறுபாடுகள் கூர்ப்படைந்து வந்துள்ளன. ஒவ்வொருவரும் பல்வேறுபட்ட முறையிலே சமூகத்துக்குப் பங்களிப்புச் செய்வதால் ஒருவித ஒருங்கிணைப்பு ஏற்படுகின்றது. இது ஒருவகையிலே மனித உடலின் செயற்பாட்டுக்கு ஒப்பானது. மனித உடலில் ஒவ்வோர் உறுப்பும் தத்தமக்குரிய தனித்துவமான தொழிற்பாட்டை மேற்கொள்ளுகின்றன. ஆனால் அவையனைத்தும் உடற்கட்டமைப்பில் ஒருங்கிணைகின்றன. தனிமனிதர்கள் சமூகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் அடங்குகின்றனர். கூட்டு மனச்சான்றே கட்டுப்படுத்தும் விசையாக அமைகின்றது. இந்தக் கட்டுப்பாடு இழக்கப்படும் பொழுது மனிதர்கள் தனிமைப்பட்டுவிடுகின்றனர்.

சமூகவியல் அறிகையில் ஏற்பட்ட ஒரு பிரதான வளர்ச்சி கோட்பாடுகளின் உருவாக்கம். இவ்வகையில் உருவான கோட்பாடுகளின் முதற்கண் தொழிற்பாட்டுவாதம் (Functionalism) சிறப்புப் பெறுகின்றது. எமில் துர்கைமின் எழுத்தாக்கங்களில் இருந்து தொழிற்பாட்டுவாதம் முகிழ்ந்தெழத் தொடங்கியது சமயம், கல்வி, கடம்பம் என்றவாறு சமூகத்தில் உள்ள நிறுவனங்களின் தொழிற்பாடுகளையும் அவற்றின் வழியாக சமூகம் இயக்கங்கொள்வதையும் இந்த வாதம் விளக்கும். தொழிற்பாடுகளின் அடிப்படையாக சமூகம் நிலைபேறு கொண்டு நீடிப்பதை ரால்கொட்பார்சன் மேலும் விபரிக்கலானார்.

கல்விச் சமூகவியல் ஆய்வுகளின் வழியாக கோட்பாடுகளுள் ஒன்றாக இடைவினைவாதம் (Interactionism) விளங்குகின்றது. ஒருவர் மற்றவருடன் மேற்கொள்ளும் ஊடாட்டங்களுக்கு இங்கே முக்கியத்துவம் தரப்படுகின்றது. ஜோர்ஜ் மீட் என்பவரின் ஆய்வுகளை அடியொற்றி இவ்வாதம் தலைதூக்கியது. சமூகத்திலுள்ள ஒவ்வொரு மனிதரதும் இயல்புக்கேற்றவாறு அவர்களுடன் மேற்கொள்ளும் தொடர்புகளும் இடைவினைகளும் வேறுபடுகின்றன. ஒருவரது இயல்பை இனங்கண்டு உறுதிப்படுத்திய பின்னர் அதற்கேற்பவே எதிர்கால நடத்தையை ஒழுங்கமைக்கின்றனர். இந்தக் கோட்பாடு நுண்பாகநிலையிலே சமூகத்தை விளக்குகின்றது அன்றி பொதுவான சமூக விளக்கத்துக்கு ஏற்புடையதன்று .

அமைப்புவாதம், பின் அமைப்புவாதம் ஆகியனவும் சமூக விளக்கம் தொடர்பாக எழுந்த கோட்பாடுகளாகும். சமூக இயல்பையும் சமூக வாழ்க்கையையும் அறிந்து கொள்வதற்கு மொழியே பிரதான கருவி என்பது இவர்களது எடுகோள். ஆழமானதும், புதைந்த கட்டமைப்பில் இருந்து கருத்துக்களைப் பிரவாகிக்கக்கூடியதுமான மொழி போன்ற நிரற்கோடல் (Code) அமைப்புக்கள் தொன்மங்கள், கலைப்படைப்புக்கள், இலக்கிய நூலகங்கள் முதலியவற்றில் அமைந்து சமூகத்தின் இயல்பை ஆழப்பலப்படுத்தி நிற்பதாக இவர்கள் குறிப்பிடுவர். பல்வேறு தள அமைப்புக்களைக் கொண்ட ஒரு முழுத் தொகுதியாக சமூகம் இயக்கம் கொள்வதையும் இவர்கள் சுட்டிக்காட்டுவர்.

சமூக இயல்பு தொடர்பாக மேலெழுந்த கோட்பாடுகளுள் ஒன்றாக பின்- நவீனத்துவம் விளங்குகின்றது. பின்னை முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் பூதாகாரமாக எழும் தொடர்புசாதனங்களின் வியாபகமும், கல்வியியல் மற்றும் பொருண்மிய நிலைகளில் நிகழ்ந்துவரும் மாற்றங்களும், மனித வாழ்க்கைக் கோலங்களிலும், நுகர்ச்சிக் கோலங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்திய வண்ணமுள்ளன. இந்நிலையில் பன்முகமாகிய இயல்புகளைக் குவியப்படுத்தும் இயல்பு பின்நவீனத்துவத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

கல்விச் சமூகவியற் சிந்தனைக்கு விசையூட்டிவரும் கோட்பாடாக மார்க்சியம் அமைந்துள்ளது. வரலாற்றுப்பொருள் முதல்வாதம் அல்லது இயங்கியற்பொருள் முதல்வாத முறையியலை மார்க்சிசம் அடிப்படையாகக் கொண்டது. உற்பத்திக் காரணிகளை உடைமையாக வைத்திருப்போர் சமூகத்தைக் கட்டுப்படுத்தும் வல்லவர்களாக விளங்குகின்றார்கள். தமது நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் அவர்களால் வலு பிரயோகிக்கப்படுகின்றது. அவர்களது கரங்களில் உள்ள வலிமையான கருவிகளுள் ஒன்றாக கல்வி அமைகின்றது.

மார்க்சிய நோக்கில் கல்விச் சமூகவியலை ஆராய்ந்தவர்களுள் பவுல்ஸ் (Bowles) ஜின்ரிஸ் (Gintis) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஆளும் வர்க்கத்தினரது நலன்களைப் பாதுகாப்பதற்குரிய வினையாற்றல் கொண்ட ஆளணியினரைத் தொடர்ச்சியாகத் தயாரித்துத் தருதலும் அவர்களது விழுமியங்களை ஏற்று அனுசரித்து நடத்தலும் கல்விச் செயல் முறையின் பணிகளாகின்றன என்பதை அவர்கள் சுட்டிக்காட்டிள்ளனர்.

நியூயோர்க் நகரப் பாடசாலைகளை ஆராய்ந்தவிடத்து (Moore, 1995, p.149) பின்வரும் நடப்பியல் தெளிவாயிற்று. அதாவது, ஆக்கத்திறன், நுண்மதி ஆற்றல் கொண்டவர்கள் சுயாதீன சிந்தனை உடையவர்களும் குறைந்த புள்ளிகளைப் பெறுகின்றனர். ஆனால் விதிகளுக்குக் கட்டுப்பட்டு, சென்றவற்றை மீட்டுச் சொல்லும் ஒழுங்குமுறை கொண்டவர்கள் கூடிய புள்ளிகளையும் பெறுகின்றனர்.

பரீட்சைப் பெறுபேறுகளை வைத்தே மாணவர்க்கு வெகுமதி வழங்கும் நிலை காணப்படுகின்றது. இதனடிப்படையிலே வேலையுலகிற்கு மாணவர்கள் செல்லும் பொழுது சம்பளத்தின் வாயிலாக மகிழ்ச்சி கொள்ளுகின்றார்களேயன்றி, தொழில் வாயிலாக மகிழ்ச்சியை எட்ட முடியாதவர்களாக இருக்கின்றனர். (It prepanes students for work where the enjoyment comes from the wage not the job itself)

அறிவு பாடங்கள் வாயிலாக செயற்கையாகத் துண்டாடப்படுவதனால் அறிவின் முழுமையை அறிய முடியாத நிலைக்கு மாணவர் உள்ளாகின்றனர் தொழிலைப் பொறுத்தவரை கூட்டுமொத்தமாக முழுமையான நிலையில் ஈடுபட முடியாதவர்களாய், ஒரு பகுதியை மட்டுமே செய்யும் நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இது அந்நியமாதற் செயல்முறையின் ஒரு பகுதியாக விளங்குகின்றது. கல்விநிலையங்களிலே பெறப்படும் அறிவின் பெரும்பகுதி வாழ்க்கைக்குப் பயன்படுதல் அரிதாகக் காணப்படுகின்றது. கல்வி சமத்துவமாகவும் சமசந்தர்ப்பங்களுடனும் அளிக்கப்படுவதில்லை. சமூகத்திலே காணப்படும் சமத்துவம் அற்றநிலையைத் துல்லியமாகத் தெரியப்படுத்தாது மூடிவிடும் நிலைகளே காணப்படுகின்றன.

கல்விச் சமூகவியலில், கல்விக்கும் சமூகமயமாக்கலுக்குமுள்ள

> பாடசாலைகள் சமூகமயமாக்கற் செயல்முறையில் ஈடுபடும்பொழுது சமூகத்தின் பரந்த தளத்திலே இசைவுகொண்டு வாழும் செயல்முறை இது பரந்த விழுமியங்களுடன் இணங்கிவாழச் செய்யும் முறைமை எனப்படும். மற்றயது குறித்துரைக்கப்படும் செயல்முறை எனப்படும். நல்ல பிரசையாக வாழுதல் முதலாவது வகைக்கு எடுத்துக்காட்டு. குறிப்பிட்ட ஒரு தொழிலோடு அல்லது சம்பவத்தோடு இணங்கிச் செல்லல் இரண்டாவது வகை

தொடர்புகள் ஆராயப்படுகின்றன. மாணவர்கள் சமூகத்துடன் பொருந்தி வாழ்வதற்கும், சமூக விதிகளையும், விழுமியங்களையும், பண்பாடுகளையும் உராய்வின்றி உள்வாங்கிக் கொள்வதற்குமுரிய அறிவாற்றல் கல்விச் செயல்முறையால் கையளிக்கப்படுகினறது. சமூக மரபுகளை அறிதல், சமூகத் தளத்தில் மொழியின் தொழிற்பாடுகளை அறிதல் சமூக உணர்வுகளோடு ஒன்றித்தல், சமூகத்தில் நிலைபேறு கொண்டுள்ள கலைகள், சடங்குகள், எதிர்பார்ப்புக்கள் முதலியவற்றை விளங்கிக் கொள்ளல், சமூகப் பாத்திரங்களை உராய்வுகள் இன்றி ஏற்று இயங்குதல், சமூக நிறுவனங்களின் தொழிற்பாடுகளோடு இசைவு கொள்ளல், வயதுக்குரிய நடத்தைகளோடு இணங்கிச் செல்லல் சமூக விளைவுகளை மீள்விளைவு செய்தல், சமூகத்தில் நிலவும் தொழில்நுட்பக் கோலங்களோடு இணங்கி இடைவினைகொள்ளல், சமூகத்திலே தொழிற்படும் நாட்டார் மரபுகளை விளங்கிக்கொள்ளல், என்றவாறு சமூக மயமாக்கற் செயற்பாடு பல பரிமாணங்களை உள்ளடக்கி நிற்கின்றது. கல்வியினால் விசைப்படுத்தப்படும் மனத்துள் வடிவமைக்கப்படும் செயல் முறையாக (Internalised Process) சமூகமயமாக்கல் விளங்குகின்றது. பாடசாலை, குடும்பம், சகபாடிகள் குழு, தொடர்புசாதன அமைப்புக்கள் முதலியன சமூக மயமாக்கல் முகவர்களாக இயங்கி வருகின்றன.

மார்க்சியக் கண்ணோட்டத்திற் குடும்பம் என்பது தனிச்சொத்துரிமையின் பலத்தோடு நிலைபேறு கொண்ட அமைப்பாக வளர்ச்சி பெற்று வந்துள்ளமை சுட்டிக் காட்டப்படுகின்றது. பாடசாலை, குடும்பம் போன்ற சமூக நிறுவனங்கள் சமூகக் கட்டுப்பாட்டின் பலம்மிக்க அலகுகளாக (Units of social Control) விளங்குகின்றன. குடும்பங்களுக்கிடையே தேசிய செல்வம் ஏற்றத்தாழ்வாகப் பங்கிடப்பட்டு வருகின்றது. இந்த ஏற்றத்தாழ்வை அரசு மிகப் பக்குவமாகப் பாதுகாத்து வருகின்றது.

ஆளும் வகுப்பினரது கருத்துக்கள் கல்வி முறைமையாலும், தொடர்புசாதனங்களாலும், குடும்பத்தினாலும் வினையாற்றலுடன் கையளிக்கப்பட்டு வருகின்றது. பிரதிகூல நிலையிலுள்ள குடும்பங்களும் ஆளும் வகுப்பினரது கருத்துக்களையும் விழுமியங்களையும் மிகச் செப்பமாகக் கையளித்து வருகின்றன.

பாடசாலைகள் சமூகமயமாக்கற் செயல்முறையில் ஈடுபடும்பொழுது சமூகத்தின் பரந்த தளத்திலே இசைவு கொண்டு வாழும் செயல்முறை இது பரந்த விழுமியங்களுடன் (Broad Values) இணங்கிவாழச் செய்யும் முறைமை எனப்படும். மற்றயது குறித்துரைக்கப்படும் (Specific type) செயல்முறை எனப்படும். நல்ல பிரசையாக வாழுதல் முதலாவது வகைக்கு எடுத்துக்காட்டு. குறிப்பிட்ட ஒரு தொழிலோடு அல்லது சம்பவத்தோடு இணங்கிச் செல்லல் இரண்டாவது வகை

வகுப்பறைகளிலே கூர்மைமிகு துருவப்பாடு மாணவருக்கும் ஆசிரியர்க்குமிடையே காணப்படுகின்றது. ஆசிரியர் வளர்ந்தோர் உலகையும் மாணவர் வளரும் உலகையும் பிரதிபலிக்கின்றனர். இந்தத் துருவப்பாட்டில் வறிய மாணவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இம்மாணவர்கள் அடக்கப்பட்ட தமது உணர்ச்சிகளை வெளியிடுவதற்கு போதிய வாய்ப்புகள் அற்ற நிலை காணப்படுகின்றது. அதுமட்டுமல்ல இவர்களே கூடிய தாழ்வுச்சிக்கலுக்கும் உள்ளாகின்றனர்.

சமூக நடிபங்குகளை அல்லது பாத்திரங்களை ஏற்றுச் செயற்படுவதற்குரிய ஆற்றலை வளர்த்தல் பாத்திரத்துக்குரிய ஆற்றல் (Role Capacity) எனப்படும். குறிப்பிட்ட பாத்திரத்தை பொறுப்புணர்ச்சியுடன் மேற்கொள்ளல் பாத்திரப் பொறுப்புணர்ச்சி (Role responsibility) எனப்படும். இந்த இரு திறன்களையும் வளர்ப்பதிலே பாடசாலைக்கும் கல்வி முறைமைக்கும் முக்கியமான பங்கு உண்டு. இந்த இரு திறன்களும் குடும்பநிலையுடன் நேரடியான இணைப்புக் கொண்டுள்ளன.

பாடசாலைகள் ஒரே கலைத்திட்டத்தைச் செயற்படுத்தினாலும் ஒரே வகையான பொதுப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயாரித்தலும் அவற்றிற்கிடையே பயன்வழிப் பன்பமைப்பாங்கு (Pragmatic Pluralism) நிலவுகின்றது. இதனால் ஒரே வகையான அல்லது ஒரே சமத்துவமான கல்வி அனுபவங்கள் எல்லா மாணவர்களுக்கும் கிடைப்பதில்லை.

வகுப்பறைகளிலே கூர்மைமிகு துருவப்பாடு (Sharp Polarization) மாணவருக்கும் ஆசிரியர்க்குமிடையே காணப்படுகின்றது. ஆசிரியர் வளர்ந்தோர் உலகையும் மாணவர் வளரும் உலகையும் பிரதிபலிக்கின்றனர். இந்தத் துருவப்பாட்டில் வறிய மாணவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இம்மாணவர்கள் அடக்கப்பட்ட தமது உணர்ச்சிகளை வெளியிடுவதற்கு போதிய வாய்ப்புகள் அற்ற நிலை காணப்படுகின்றது. அதுமட்டுமல்ல இவர்களே கூடிய தாழ்வுச்சிக்கலுக்கும் உள்ளாகின்றனர்.

பாடசாலைகளின் விரிவாக்கம் ஆகியவை நிகழ்ந்து வந்துள்ளபோதும், வருமான ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதிலே அவை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. (International Development, Vol 18, No.2) இதை மேலும் விளக்குவதனால்தனியாள் வருமான முன்னேற்றமும் அவரின் அறிகைத்திறனும் சுயாதீனமாகவே இயங்குகின்றன.

மிகுந்த மலிவான விலையில் குடும்பத்தில் அமைதி கிடைக்கப் பெறும் நிலையும், வேலைத் தளங்களிலே கிடைக்கப்பெறாத அமைதி குடும்பத்திலே கிடைக்கப்பெறுதலும், அதிகாரத்திலுள்ள வகுப்பினருக்கு சாதகமான நிலையை ஏற்படுத்திவிடுகின்றது. அத்துடன்

மான நிலையை ஏற்படுத்திவிடுகின்றது. அத்துடன் குடும்பம் சுயாதீனமான சிந்தனைகளுக்கு இடமளிக்காதிருத்தலும், ஆளும் வகுப்பினருக்கு முரண்படாத வைதிக சிந்தனைகளைக் குடும்பங்கள் வளர்த்து வருதலும் சமூகமயமாக்கலிற் குறிப்பிடப்பட வேண்டி பரிமாணங்களாகவுள்ளன.

முன்னணிப் பாடசாலைகள் என்ற எண்ணக்கரு நமது நாட்டில் மேலோங்கத் தொடங்கியுள்ளது. இப்பாடசாலைகள் சமூக நிரலமைப்பின் உயர்ந்தோருக்குரியவையாகவுள்ளன. வறிய மாணவர்கள் ஒரு சிலர் முன்னணிப் பாடசாலைகளுக்குச் செல்வதற்குரிய வாய்ப்பைப் பெற்றாலும் அப்பாடசாலைகளின் கவிநிலையும் செயற்பாடுகளும் அவர்களை விரக்தி நிலைக்கு உள்ளாக்குகின்றனர்.

பாடசாலையில் நிகழும் போட்டி முறைமை, ஊக்குவிப்பு நடவடிக்கைகளைக் காட்டிலும் விரக்தியை உருவாக்குவதிலே கூடிய பங்களிப்பைச் செய்கின்றன. போட்டி முறைமையின் இன்றைய வளர்ச்சி சுயநல வளர்ச்சியைத் தொடர்ந்து மீள வலியுறுத்துவதால் கூட்டுறவும் குழு வாழ்க்கையும் சிதறிவிடுகின்றன. இந்தப் பண்புகள் ஆசிரியத்துவத்திலும் விரவியுள்ளன.

**BIBLIOGRAPHY**


Ahmad, K. (ed) Women, Socilization and Eduction. New delhi : Nehru Memorial Museum (Forthcoming)

Banks, O. The Sociology of Education. London: Batsford, 1968. Boudon, R. Education. Opportunity and social Inequality. New York: Wily, 1973

Chitnis, S. A Long Way to Go. New Delhi: Allied. 1981

Dore, R. the Diploma Disease. London: George Allen & Unwin, 1976

Eggleston, J.The Socilogy of the Curriculum. London: Routledge & Kegan Paul, 1997.

Galtung, 'Educational Disparities, World Politics and the New International Economic Order' in UNESCO and International Institute of Educational Planning (1981): Planing Education for Redicing Inequalities reproduced in J. Veeraraghavan (ed) Education and the New Internmational Order New Delhi National Institute of Educational Planning and Administration anbd publishing Company, 1983

Glass, R 'Divided and Degraded : Downtrodden Peoples of India.' (Montly Review , 34:3, 1982) pp 101-127.

Gore . M.S ., Desai. I.P & Chitnis, S (eds) Papers in the Sociology of Education. New Delhi: NCERT 1967.

Halsey, A.H. Floud, j ann Anderson, CA (eds) Education, Economy and society. Glencoe, III FreePress, 1961.

Isaacs, H.R India's Ex - Untouchables. Bombay : Asia, 1965

Jayaram, N. 'Protective Discrimination and Education. 'Main stream (Republic Day Number, 1983) pp.28-34.

Kamat, A.R. Education and Social Change in India, Bombay: Somaiya, 1985.

Karlekar, M. 'Education and Inequality' in Equality and Inequality andra Beteille (ed) New Delhi: Oxford, 1983.


*'இந்தியாவில் சமூகம் என்பது சாதியப் படிவங்களால் ஆனது. சாதியில்லாமல் ஒரு மனிதன் பிறப்பது மில்லை, வாழ்வது மில்லை. இந்திய அரசியல் சட்டப்படி கூட ஒரு மனிதன் மதம் மாறத்தான் முடியும். சாதி மாற முடியாது.'*

-பேரா.தொ.பரமசிவன்-

*****

*'ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அமைதியின்மை மற்றும் பதட்ட நிலை நிலவும் போது, இக்கட்டான சூழ்நிலைகளின் போதும், வழக்கமான தகவல் சாதனங்கள் தடைப்படும் போதும், அவற்றின் நம்பகத்தன்மையில் சந்தேகம் தோன்றும் போதும் வதந்திகள் உருவாகுவதாக ஜான்வான்சனா குறிப்பிடுவர்'*

-பேரா.ஆ. சிவசுப்பிரமணியம்

# மொழி தொடர்பான கொள்கைகளும் கற்றல் செயன்முறைகளும்

ஒவ்வொரு மாணவரும் மொழித் திறன்களைச் சிறப்பாக விருத்தி செய்தல் அவசியம். இந்நிலையில் மொழித் திறன்கள் என்பன செவிமடுத்தல் (கேட்டல்), பேசுதல், வாசித்தல், எழுதுதல், என்ற நான்குமாகும். இவற்றை நான்கு அடிப்படை மொழித்திறன்கள் என்றும் கூறப்படுகின்றது. ஒரு மாணவருக்கு கணிதத் தேர்ச்சியை ஊட்டுவதற்கு கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல், என்ற அடிப்படை தெரிவது போல மொழித் திறன் தேர்ச்சியை அடைய மேற்கூறிய நான்கும் அவசியமாகும். இந்நான்கும் பிள்ளைகளின் வளர்ச்சியில் பருவங்களுக்கேற்ப காணப்படும்.

ந.பார்த்தீபன்
விரிவுரையாளர்
கல்வியியல் கல்லூரி, வவுனியா

ஒவ்வொரு மாணவரும் மொழித்திறன்களைச் சிறப்பாக விருத்தி செய்தல் அவசியம். இந்நிலையில் மொழித்திறன்கள் என்பன செவிமடுத்தல் (கேட்டல்) , பேசுதல், வாசித்தல், எழுதுதல், என்ற நான்குமாகும். இவற்றை நான்கு அடிப்படை மொழித்திறன்கள் என்றும் கூறப்படுகின்றது. ஒரு மாணவருக்கு கணிதத் தேர்ச்சியை ஊட்டுவதற்கு கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல், என்ற அடிப்படை தெரிவது போல மொழித் திறன் தேர்ச்சியை அடைய மேற்கூறிய நான்கும் அவசியமாகும். இந்நான்கும் பிள்ளைகளின் வளர்ச்சியில் பருவங்களுக்கேற்ப காணப்படும். இவ் வளர்ச்சிப் பருவங்களுக்கேற்ப கற்றல் வேகமும் வேறுபட்டுக் காணப்படும். இவ்வாறான விடயங்களை கற்பித்தலில் ஈடுபடுபவர்களும் குறிப்பாக ஆசிரியர்களும், கற்பித்தலில் அக்கறை கொண்டோர்களும் குறிப்பாக பெற்றோர் - பாதுகாவலர்களும் கருத்திற் கொண்டு செயற்படுதல் அவசியமாகும்.

இந்நிலையில் செவிமடுத்தல் திறன்களை விருத்தி செய்ய செவிமடுத்துச் செயற்படுதல், செவிமடுத்து வரைதல், செவிமடுத்து ஆக்குதல் ஆகிய செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடச் செய்தல் வேண்டும். மேலும் செவிமடுத்தல் என்பது வெறுமனே கேட்டல் மட்டுமல்ல மாறாக கேட்டலை கிரகித்துக் காரியமாற்றல், வினாக்களை வினாவுதல் (இச்செயற்பாடே செவிமடுத்தலை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை இனங்காண வினைத் திறனானது) பொருத்தமான விடையளித்தல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்ளை ஈடுபடச் செய்தல் அவசியமானதாகும். அடுத்து பேச்சுத் திறன்களை விருத்தி செய்ய உரையாடல் (சகபாடிகளுடன் இயல்பாகக் கதைத்தல்) கதைகூறல், பாக்களை ஓதுதல், (பாடல்களை தொனிவேறு பாட்டுடன் பாடுதல்) படம் அல்லது செயல் ஒன்றை விபரித்தல், சிறிய விடயங்களைப் பேசுதல் (சொற்பொழிவுகளை நிகழ்த்துதல்) போலச் செய்து செயற்படுதல் போன்ற விளையாட்டுக்களைச் செய்தல், சிறிய நாடகங்களில் பாத்திரமேற்று நடித்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல் அவசியமானதாகும். மேற்கூறிய இரண்டு செயற்பாடுகளும் (செவிமடுத்தல், பேசுதல் ஆகிய இரு அடிப்படை மொழித்திறன்களும் ) மாணவர்களது வீட்டுச் சூழலில் நடைபெறுவதால் இவற்றை மேலும் மேம்பாடடையச் செய்தலில் ஓரளவு கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

இனி, மூன்றாவது அடிப்படை மொழித்திறனான வாசித்தலை விருத்தி செய்ய பார்வைப் பிரித்தறிகைத் திறன்களையும் இடமிருந்து வலம் திசைமுகப்படுத்தலையும் கவனத்திற் கொள்ள வேண்டும். எழுத்துக்களின் ஒலி- வரி வடிவங்களைச் சொற்களில் இனங்காணல், சொற்பொருளைத் தேடியறிதல், மேலதிக வாசிப்பு நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட பந்தியை - கதையை வாசித்தல், விளம்பரங்கள் - அறிவித்தல் என்பவற்றை ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல் வேண்டும். அடுத்து இறுதியான அடிப்படை மொழித்திறனான எழுத்துத் திறன்களை விருத்தி செய்ய கை- கண் இணைத்தல், பென்சிலை முறையாகப் பிடித்துக் கோலங்களில் ஈடுபடல், நெறிப்படுத்தலுடனான சொற்கள் - வாக்கியங்கள் என்பவற்றை அமைத்தல், ஆக்கி எழுதுதல், சட்டகங்கள் எழுதுதல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடச் செய்ய வேண்டும். இந்நிலையில் எழுதுதல் , வாசித்தல் என்ற அடிப்படை மொழித்திறன்கள் பாடசாலையிலே தான் பெருபாலும் நடைபெறுவதால் இச்செயற்பாடுகளில் அதிக கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகின்றது.

மேற்கூறிய செயற்பாடுகள் யாவும் முன்னர் குறிப்பிட்டதுபோல் பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவங்களுக்கு ஏற்ப வேறுபடுவதுடன் கற்றலில் வேகத்தையும் அதிகரிக்கின்றது. ஆரம்பக் பிரிவு மாணவர்களை தற்போது மூன்று நிலைகளில் பிரித்து; முதன்மை நிலை I ல் (தரம்1 தரம்2) உள்ள மாணவர்களையும், முதன்மை நிலை II ல் (தரம்3, தரம்4) உள்ள மாணவர்களையும்,

முதன்மை நிலை III ல் (தரம் 5) உள்ள மாணவர்களையும் உள்ளடக்குவது புதிய கல்விச் சீர்திருத்ததின் முக்கிய செயற்பாடாகும். இந்த நிலைகளுக்குரிய குறிப்பாக தரங்களுக்குரிய வகையில் இச்செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

பசி, பயம், வசதிக்குறைவு போன்ற காரணங்களுக்காக பிள்ளைகள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளுகின்றனர். மேலும் தம்மைச் சுற்றியுள்ளவற்றையும், சுற்றி நடப்பன பற்றியும் அறியும் ஆவல் கொண்டதாக ஒவ்வொரு பிள்ளையும் காணப்படும். மேலும் தன் ஆளுமையை விருத்தி செய்ய ஒவ்வொரு குழந்தையும் முயற்சி செய்கின்றது. மொத்தத்தில் தான் உயிர் வாழ்வதற்கும் தனது இடத்தை உறுதிப்படுத்துவதற்கும் ஒவ்வொரு குழந்தையும் உந்தப்படுகிறது.

இதற்கான காரணம், விருத்தி என்பது வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நிற்காது தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு செயற்பாடாகும். ஒவ்வொரு பருவத்திலும் விருத்தியல் சிறப்புகள் காணப்படும். இந்த வளர்ச்சி - விருத்தி ஓர் ஒழுங்கு முறையில் அமைந்த வளர்ச்சிப் போக்கினைக் கொண்டிருப்பதும் எல்லாப் பிள்ளைகளிலும் இது ஓர் ஒத்த தன்மையாயிருப்பதையும் அவதானிக்க முடியும்.

மேற்கூறிய ஒழுங்கு முறையில் அமைந்த வளர்ச்சிக்கும் - ஒத்த தன்மைக்கும் பல காரணங்களை மொழியியலாளர்கள் கூறியுள்ளனர். இந்த வகையில் நோம் சோம்ஸ்கி *(Noam chomsky)* என்பவரது கொள்கையை எடுத்து நோக்கலாம் "உலகம் முழுதிலும் வாழும் பிள்ளைகள் தாய்மொழியறிவை ஒரே மாதிரியாக வளர்க்கின்றார்கள் விருத்தி செய்கின்றார்கள்" எனத் தன் ஆய்வின் மூலம் எடுத்துரைக்கிறார். இக்கொள்கையானது மொழி கற்றல் தொடர்பான அனைத்துலக செயன்முறைகள் பற்றிய பொதுமைக் கொள்கையாக இன்று காணப்படுகிறது. பல்வேறு நாட்டு உளவியலாளர்களும் மொழியியல் ஆய்வாளர்களும் பிள்ளைகள் எவ்வாறு பேசப் பழகுகிறார்கள் என்ற கொள்கைகளை உருவாக்க சோம்ஸ்கியின் இக்கொள்கை உதவியுள்ளது. மேலும் ஒவ்வொரு குழந்தையும் மொழிமூலம் தொடர்பாடுவதைப் பழகுவதற்கு ஏற்ற வசதியளிக்கும் முறையில் அமைந்த மொழி அறிவைப் பெறும் உபாயத்துடனே (Language cquistion Device) கருவி காரணங்களுடனேயே பிறந்துள்ளனர் என்றும் சோம்ஸ்கி கூறியுள்ளார். இக்கொள்கைகளின் மூலம் பிள்ளைகளின் வளர்ச்சி - விருத்தி ஓர் ஒழுங்கு முறையிலும், ஓர் ஒத்த தன்மையிலும் அமைந்திருக்கும் என்பது வெளிப்படையாகின்றது.

இதேபோன்று ஏன், எங்கே, எப்படி, யார் போன்ற வினாக்களைக் கேட்டு பெரியவர்களை (தம்முடன் அன்புடன் நெருக்கமாகப் பழகுவோரை) திக்குமுக்காடச் செய்யும் திறன் படைத்தவர்களாக ஒவ்வொரு குழந்தையும் காணப்படுகின்றது. மேலும் புதிய காட்சிகள், சம்பவங்கள் என்பவற்றை ஆவலுடன் பார்த்து அவை பற்றி அறியும் ஆர்வத்தையும் எல்லாப் பிள்ளைகளும் கொண்டிருக்கும் இந்நிலையைப் 'பங்கேற்கும் உத்தேசங்கள்' என்ற ஜெரோம் புறூணர் (Jerome Bruner) கூறுகின்றார். பிறந்த குழந்தையானது சில நாட்களிலேயே ஓர் ஒளிக்கற்றையைப் பின் தொடர்ந்து பார்க்கும் என்றும் குறிப்பாகத் தாயின் பார்வையைப் பின் தொடர்ந்து அதன் பார்வை செல்லும் என்றும் புறூணர் குறிப்பிடுகிறார். இத்தகைய ஒரு நிலையானது மிக ஆரம்ப காலத்திலிருந்தே பிள்ளைகளை ஏனையோருடன் கற்றல் அனுபவங்களை பார்த்தோ-கேட்டோ அறிய ஆயத்தமாக உள்ளனர் என்பதை நிரூபிக்கின்றது. புறூணர் இச்செயற்பாட்டின் மூலம் பிள்ளைகளின் ஆக்கத்திறன் கற்பனையாற்றல் என்பவற்றை வளர்க்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே பிள்ளைகளின் வளர்ச்சி - விருத்தி ஓர் ஒழுங்கு முறையிலும் ஒத்த தன்மையிலும் இருக்கும் என்பதை இவரது ஆய்வும் வலியுறுத்துவதைப் பார்க்கிறோம்.

பசி, பயம், வசதிக்குறைவு போன்ற காரணங்களுக்காக பிள்ளைகள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளுகின்றனர். மேலும் தம்மைச் சுற்றியுள்ளவற்றையும், சுற்றி நடப்பன பற்றியும் அறியும் ஆவல் கொண்டதாக ஒவ்வொரு பிள்ளையும் காணப்படும். மேலும் தன் ஆளுமையை விருத்தி செய்ய ஒவ்வொரு குழந்தையும் முயற்சி செய்கின்றது. மொத்தத்தில் தான் உயிர் வாழ்வதற்கும் தனது இடத்தை உறுதிப்படுத்துவதற்கும் ஒவ்வொரு குழந்தையும் உந்தப்படுகிறது. இந்த உந்துதலின் விளைவாக தொடர்பாடுவதற்குரிய தேவை, தாம் வாழும் உலகத்தைப் புரிந்து கொள்ளும் தேவை, தம்மைச் சூழவுள்ளவற்றைக் கட்டுப்படுத்தும் தேவை என்பன எல்லாக் குழந்தைகளுக்கும் இயற்கையான, இயல்பான தேவையாக இருக்கின்றது. இந்நிலையில் பிள்ளையால் கற்காமல் இருப்பதென்பது முடியாத காரியமாகின்றது. இவற்றை ஆய்வு ரீதியாக பிறவுண் (Brown) பெல்லூஜி (Bell ugi) மைக்கல் ஹலிடே (Michal Haliday) றூக்கியா ஹஸன் (Ruquia Hassan) கிராண்டா பிசெக்ஸ் (Glenda Bissex) ஆகிய ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

மேற்கூறிய கருத்துக்களிலிருந்து ஒவ்வொரு பிள்ளையும் பல்வேறு சிறப்பியல்புகளுடன் புதியவற்றை அறியும் மனப்பாங்குடன் அதற்குரிய திறன்களுடன் பிறந்துள்ளன என்பதை ஆசிரியர்கள் மனங்கொள்ள வேண்டும். இந்நிலையில் பிள்ளைகளை அன்போடு அரவணைத்து கற்பித்தல் பணியை செவ்வனே நிறைவேற்றினால் எல்லாப் பிள்ளைகளும் தேர்ச்சி மட்டத்தினை எய்துவார்கள். கற்பித்தல் என்பது வழிகாட்டும் பணி அறிய ஆர்வமுள்ளோராய் பிள்ளைகள் உள்ள போது அவர்களுக்கான தூண்டுதலே ஆசிரியரின் கடமையாகும். இங்கு ஆசிரியர்கள் நிரப்பப்பட வேண்டிய பாத்திரமாக அன்றி ஏற்றப்பட வேண்டிய தீபமாய் மாணவரை நினைக்க வேண்டும்.

# கஷ்டப் பிரதேச கல்விப் பிரச்சினைகள்

ஒவ்வொரு மாணவரும் மொழித் திறன்களைச் சிறப்பாக விருத்தி செய்தல் அவசியம். இந்நிலையில் மொழித் திறன்கள் என்பன செவிமடுத்தல் (கேட்டல்), பேசுதல், வாசித்தல், எழுதுதல், என்ற நான்குமாகும். இவற்றை நான்கு அடிப்படை மொழித்திறன்கள் என்றும் கூறப்படுகின்றது. ஒரு மாணவருக்கு கணிதத் தேர்ச்சியை ஊட்டுவதற்கு கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல், என்ற அடிப்படை தெரிவது போல மொழித் திறன் தேர்ச்சியை அடைய மேற்கூறிய நான்கும் அவசியமாகும். இந்நான்கும் பிள்ளைகளின் வளர்ச்சியில் பருவங்களுக்கேற்ப காணப்படும்.

ச.கணேசமூர்த்தி
அதிபர்
மட்/மண்டூர் இல : 39, அ.த.க.பா

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மருத்துவம் முதலான வசதிகளின் கிடைப்பினையும் அவற்றில் காணப்படும் திருப்தி நிலையினையும் கொண்டு கஷ்டமற்ற பிரதேசங்கள், கஷ்டமான, அதி கஷ்டமான பிரதேசங்கள் என பிரதேசங்கள் பாகுபடுத்தப்பட்டுக் கூறப்படுகின்றன. இவ்வாறான பாகுபடுத்தல்களில் கஷ்டப்பிரதேச கல்விப் பிரச்சினைகள் பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மூன்று கல்வி வலயங்களில், 85 பாடசாலைகளைக் கொண்டதாகக் காணப்படும் பட்டியிருப்பு கல்வி வலயத்தின் போரதீவுப் பற்று கல்விக் கோட்டத்திலுள்ள ஏழு பாடசாலைகள் இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மட்/ மண்டூர் இல 39 அ.த.க பாடசாலை, மட்/ மண்டூர் - இல - 40 அ.த.க பாடசாலை மட் /வெள்ளிமலைப் பிள்ளையார் அ.த.க பாடசாலை, மட் / திக்கோடை கணேச வித்தியாலயம், மட் /தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயம், மட்/ பிலாலி வெம்பு வாணி தமிழ் வித்தியாலயம் என்பவையே அவையாகும். இப்பாடசாலை அதிபர்கள் மூலம் கொண்டு பெறப்பட்ட தகவல்களே இக்கட்டுரை எழுதுவதற்கான ஆதாரங்களாயுள்ளன.

மட்/ மண்டூர் இல 39 அ.த.க பாடசாலை , மட்/ மண்டூர் இல 38 அகத்தியர் வித்தியாலயம் மட்/ வெள்ளிமலைப் பிள்ளையார் அ.த.க பாடசாலை மட்/ பிலாலி வெம்பு வாணி தமிழ் வித்தியாலயம் ஆகியன தரம் -05 வரை வகுப்புக்களைக் கொண்ட மூன்றாந்தர ஆரம்பப் பாடசாலைகளாகவும் ஏனைய மூன்று பாடசாலைகளும் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட இரண்டாம் தர இடைநிலைப் பாடசாலைகளாகவும் உள்ளன. அதேவேளை இவை அனைத்தும் அதிகஷ்டப் பிரதேசத்திலமைந்துள்ளன.

இனி இப்பாடசாலைப் பிரதேசத்தின் கல்விப் பிரச்சினைகள் ஆராய்வோம்.

## கல்விப் பிரச்சினைகள்

1. பாடசாலைக் காணிக்கான உறுதி, ஒப்பம், வரைபடம் தொடர்பான பிரச்சினை

இப்பாடசாலைகளில் அனேகமானவை கல்லோயாக் குடியேற்ற காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இப்பாடசாலைக் காணிகள் தொடர்பான வரைபடமோ, ஒப்பமோ, உறுதியோ அற்றவையாக உள்ளன. இதன் காரணமாக பாடசாலைக் காணி எல்லைகள் காணி அளவு முதலியன பற்றிய விடயங்களில் தெளிவின்மை காணப்படுகின்ற அதேவேளை வெளியார்களின் ஆக்கிரமிப்புக்கும் அவை உள்ளாகின்றன. இதனால் திட்டமிட்டு கட்டிடங்களை அமைக்கவோ சுற்றுவேலி மதில் போன்றவற்றை நிச்சயித்து நிறுவவோ, பாடசாலைத் தோட்டம், மைதானம் போன்றவற்றுக்கான இடங்களை ஒதுக்கி செயற்படுவதற்கோ முடியாத நிலை காணப்படுகின்றது. (உ-ம்) மட்/ மண்டூர் இல 39 அ.த.க பாடசாலை,மட்/ திக்கோடை கணேச வித்தியாலயம் என்பனவற்றுக்கு காணி அளவை வரைபடமோ, உறுதியோ, ஒப்பமோ இல்லை. இவை பாடசாலை செயற்பாடுகளைத் தூர நோக்குடன் திட்டமிடத் தடையாயுள்ளன.

2. பாடசாலை சுற்றுவேலி / மதில் நுழைவாயில் தொடர்பான பிரச்சினை

இதன் காரணமாக பாடசாலைக் காணியில் வெளியாரின் அத்துமீறல்-

கள், வனவிலங்குகளினதும், கால் நடைகளினதும் நேரடித் தாக்கங்கள், பாடசாலைக் கட்டிடம் பற்றிய பாதுகாப்பு, தளவாடம், மற்றும் பாடசாலை மாணவர், ஆசிரியர் போன்றோருக்கு ஏற்படும் செயற்பாட்டுத் தடங்கல், வெளியாரின் அச்சுறுத்தல், குறிப்பாக அவற்றை உரிமை கொண்டாடுதல், பாடசாலை கட்டிடத்தினுள்ளும் வளவினுள்ளும் நுழையும் கால் நடைகளாலும், வனவிலங்குகளாலும் நிகழும் கெடுதல்கள் (உ-ம்) மட்/ மண்டுர் இல 39 அ.த.க பாடசாலை, மட்/ மண்டுர் இல 40 அ.த.க பாடசாலை, மட்/ திக்கோடை கணேசவித்தியாலயம்.

3. பாடசாலைக்கான நிரந்தரக் கட்டிடம், வகுப்பறைகள் தொடர்பான பிரச்சினை

நவீன கல்விச் சீர்திருத்தத்துக்கு அமைவாக அமைக்கப்பட்ட கட்டிடங்கள் இன்மை ஒருபுறமிருக்க பாடசாலைக்கு நிரந்தரக்கட்டிடமின்மையும், கட்டிடங்களில் அறைகள் இன்மையும் பெரும் பிரச்சினையாகவுள்ளது.

43 மாணவர்கள் கற்கும் மட்/ வெள்ளிபாலைப் பிள்ளையார் அ.த.க பாடசாலை இன்னமும் தற்காலிக கட்டிடமொன்றிலேயே இயங்கிவருகின்றது. அதேவேளை மட்/ மண்டுர் இல 39 அ.த.க பாடசாலைக்கு போதிய கட்டிடவசதி இருந்த போதிரும் கட்டிடம் மிகப் பழமையானதால் உடைந்தும், சேதமடைந்தும் வெடித்தும் காணப்படும் அதேவேளை தெரிக்கப்பட்ட வகுப்பறைகளோ மற்றும் வசதிகளோ அற்றதாகக் காணப்படுகின்றது.

இவை மாணவர்களின் கற்றல், ஆசிரியர்களின் கற்பித்தல் என்பனவற்றில் அதிக பிரச்சினைகள் உண்டு பண்ணுவதுடன், இப் பாடசாலைகளை நடத்திச் செல்வதிலும் சிரமத்தையுண்டு பண்ணுகின்றது.

4. ஏனைய கட்டிட வசதிகள் தொடர்பான பிரச்சினை

மாணவர் விடுதி, ஆசிரியர் விடுதி, சங்கீத பாட அறை, விஞ்ஞான ஆய்வு கூடம், செயற்பாட்டறை, நூலகம், தொழில்நுட்ப பாட அறை முதலியன இன்மை இப் பாடசாலைகள் எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சினைகளில் குறிப்பிடத்தக்கவை.

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களில் அனேகர் தமதிருப்பிடங்களிலிருந்து பாடசாலைக்கு நாளாந்தம் 40 கிலோ மீற்றர் வரை சென்று வரவேண்டியவர்களாக உள்ள அதே வேளை, பலர் எழுவான்கரைப் பிரதேசத்திலிருந்தே பயணிக்கின்றனர். இவர்களின் நீண்டதூரப் பயணம் ஒரு புறமிருக்க மழை, வெள்ள காலங்களில் பாதைகள் துண்டிக்கப்படுவதாலும், பாதைகள் சேறும் சகதியுமாக இருப்பதனாலும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டி யுள்ளது. அதேபோல் இப்பகுதிப் பாடசாலைகள் 4 கிலோமீற்றர்கள் வரையிலான தூரங்கள் இடைவெளியிலிருப்பதனாலும் அவற்றில் பெரும்பாலானவை ஆரம்பக்கல்வி வகுப்புக்களை மட்டும் கொண்டிருப்பதனாலும் போக்குவரத்து தொடர்பாக மாணவர்களும் பல அசெகரியங்களுக்கு ஆளாகின்றார்கள். இது கல்வியைப் பெரிதும் பாதிக்கின்றது.

இப்பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களில் அனேகர் தமதிருப்பிடங்களிலிருந்து பாடசாலைக்கு நாளாந்தம் 40 கிலோ மீற்றர் வரை சென்று வரவேண்டியவர்களாக உள்ள அதே வேளை, பலர் எழுவான் கரைப் பிரதேசத்திலிருந்தே பயணிக்கின்றனர். இவர்களின் நீண்டதூரப் பயணம் ஒரு புறமிருக்க மழை, வெள்ள காலங்களில் பாதைகள் துண்டிக்கப்படுவதாலும், பாதைகள் சேறும் சகதியுமாக இருப்பதனாலும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. அதேபோல் இப்பகுதிப் பாடசாலைகள் 4 கிலோமீற்றர்கள் வரையிலான தூரங்கள் இடைவெளியிலிருப்பதனாலும் அவற்றில் பெரும்பாலானவை ஆரம்பக்கல்வி வகுப்புக்களை மட்டும் கொண்டிருப்பதனாலும் போக்குவரத்து தொடர்பாக மாணவர்களும் பல அசெகரியங்களுக்கு ஆளாகின்றார்கள். இது கல்வியைப் பெரிதும் பாதிக்கின்றது. எனவே ஆசிரிய மாணவ விடுதிகள் இப்பாடசாலையின் தேவைகளாகவுள்ளன.

இவற்றுடன் நூலகம், ஆய்வு கூடம் போன்ற மேற்சொல்லப்பட்ட கட்டிட வசதிகளின்மை இப்பகுதியின் கல்வியில் பெரும் பிரச்சினைகளை தோற்றுவிப்பதாய் உள்ளது. ஆய்வுக்காக எடுக்கப்பட்ட இப்பாடசாலைகள் எவற்றிலும் மேற்சொன்ன வசதிகள் எவையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

5 குடிநீர்ப் பிரச்சினை

பாடசாலை ஆளணியினராகக் காணப்படும் மாணவர், ஆசிரியர், மற்றும் ஊழியர்கள் நீரருந்துவதற்கான குடிநீர் வசதிகள் இன்மையானது இப்பிரதேசப் பாடசாலைகளின் முக்கிய பிரச்சினையாகவுள்ளது. குறிப்பாக ஏப்ரல், மே மாதங்களுக்கப்பால் ஒக்ரோபர் மாதம் வரை இப்பாடசாலைகள் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. இப்பகுதிகளில் கடும் வரட்சி நிலவுவதால் குடிநீர்க்கிணறுகள் வற்றி விடுவதுடன் தூர இடங்களுக்குச் சென்று பலத்த கஷ்டத்தின் மத்தியிலேயே குடிநீரைக் கொண்டுவர வேண்டியுள்ளது. அதுவும் போதியளவு நீர் கிடைக்காது. மட்/ வெள்ளிமலைப் பிள்ளையார் அ.த.க பாடசாலையில் கிணறு இல்லை. மட்/ மண்டுர் இல 40 அ.த.க பாடசாலை மட்/ மண்டுர் இல 39 அ.த.க பாடசாலை மட்/ வெள்ளிமலைப் பிள்ளையார் அ.த.க பாடசாலை, மட்/ மண்டுர் இல

38 அகத்தியர் வித்தியாலயம், மட்/ பிலாலி வெம்பு வாணிதமிழ் வித்தியாலயம் என்பன இதன் கடுமையான பாதிப்பை எதிர்கொள்கின்றன.

6. தளவாடப் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினை

இப்பாடசாலைகளில் நிலவும் தளவாடப்பற்றாக்குறையும் இப் பிரதேச கல்விப் பிரச்சினைகளாக இனங்கணப்படுகின்றன. குறிப்பாக ஆசிரியர் மாணவர்களுக்கான தளவாடங்களின் பற்றாக்குறையானது க்ல்வியில் பெரும் பின்னடைவை உண்டு பண்ணுகிறது. (உ-ம்) மட்/ தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயத்திற்கு கற்பிக்கச் செல்லும் ஆசிரியர்கள் 19 பேர் ஆனால் அங்கு உட்டு (08) ஆசிரியர்களுக்கு மட்டுமே கதிரை, மேசை உள்ளது மீதி 11 பேருக்கும் அவை இல்லை.

> மனித அத்தியாவசியத் தேவைகளில் பிரதானமான ஒன்று மலசலம் கழித்தல் ஆகும். மலசலகூடங்கள் பாடசாலைகளில் இன்மையால் இத்தேவைகளை மாணவர்களும், ஆசிரியர்களும் ஏனைய ஆளணியினரும் வேண்டிய போது நிறைவு செய்ய முடியாதுள்ளது. இது கல்வியை பெரிதும் பாதிக்கிறது. இதனால் பல்வேறு தீய விளைவுகளும் நிகழ்வதும் உண்டு.

7. மலசல கூடங்கள் தொடர்பான பிரச்சினை

மனித அத்தியாவசியத் தேவைகளில் பிரதானமான ஒன்று மலசலம் கழித்தல் ஆகும். மலசலகூடங்கள் பாடசாலைகளில் இன்மையால் இத்தேவைகளை மாணவர்களும், ஆசிரியர்களும் ஏனைய ஆளணியினரும் வேண்டிய போது நிறைவு செய்ய முடியாதுள்ளது. இது கல்வியை பெரிதும் பாதிக்கிறது. இதனால் பல்வேறு தீய விளைவுகளும் நிகழ்வதும் உண்டு.

மட்/ வெள்ளிமலைப் பிள்ளையார் அ.த.க பாடசாலை மட்/ மண்டூர் இல 38 அகத்தியர் வித்தியாலயம் மட்/ மண்டூர் இல 39 அ.த.க பாடசாலை, மட்/ மண்டூர் இல 40 அ.த.க பாடசாலை ஆகியவற்றில் மலசல கூடங்கள் அமைக்கப்படவில்லை.

8. மின்சார வசதி இன்மை தொடர்பான பிரச்சினை

கஷ்டப் பிரதேச பாடசாலைகளின் கல்விப் பிரச்சினையில் மின்சார வசதியின்மை குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். மின்சாரம் இன்மையால் கட்புல, செவிப்புல சாதனங்களை மின் உதவியுடன் இயங்கச் செய்ய முடியாமை. (உ-ம்) வானொலி , தொலைக்காட்சி இது மட்டுமன்றி மழைக்கால இருள்சூழ் வேளையில் கற்றல் கற்பித்தல் பாதிக்கப்படும் போது மின்சாரத்தைப் பயன்படுத்த முடியாமை. பாடசாலையின் பிரதான விழாக்களை வாணிவிழா, விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா போன்றவற்றிலும், கலைநிகழ்வு, ஒன்று கூடல் கூட்டங்கள் போன்வற்றிலும், பயன்படுத்தமுடியாமை. மேற்படி பாடசாலைகளில் மட்/ தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயம் தவிர ஏனைய பாடசாலைகளில் இவ்வசதி இல்லை.

9. போக்குவரத்துப் பிரச்சினை

இப்பகுதிப் பாடசாலைகள் அமைந்துள்ள கிராமங்களுக்கூடாக போக்குவரத்து செய்யப்பயன்படும் பாதைகள் குன்றும், குழியுமாகவும், சகதியும் சேறுமாகவும் காணப்படுவதாலும். இப்பகுதிகளுக்கு சீரான போக்குவரத்துக்களோ, வாகன வசதிகளோ இன்மையாலும், ஆசிரியர்களும், மாணவர்களும், பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக துவிச்சக்கர வண்டிகளும், மோட்டார் சைக்கிள்களுமே பிரதான போக்குவரத்து சாதனங்களாக உள்ளன.

சீரான பொதுப் போக்குவரத்து இன்மையும் உரிய நேரத்திற்கு வாகனமின்மையும் ஆசிரியர் மாணவர்களின் பாடசாலை வரவில் பெருவீழ்ச்சியை நிகழ்த்துவதாக உள்ள அதே வேளை பாடசாலைக்கு தாமதித்து வருதல், முந்திச் செல்லல் போன்ற நிலமைகளுக்கும் இடமளிப்பதாயுள்ளது. இது மாணவர் கல்வியை சீராகப் பெறவும் அதனை ஆசிரியர் வழங்குவதற்கும் பெரும் தடையாக உள்ளது.

10. ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினை

ஆசிரியர் பற்றாக்குறை இப்பிரதேச பாடசாலைகளின் கல்விப் பிரச்சினையில் பெருந்தாக்கத்தை உண்டுபண்ணுகின்றது. ஆசிரியர் பற்றாக்குறை (விசேட பாடங்களுக்கு) மேலும் மோசமாக உள்ளது. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், அழகியல், தொழிநுட்பப் பாடங்களுக்கான ஆசிரியர்கள் பெரும் பற்றாக்குறையாக உள்ளனர்.

குறிப்பாக கணித, விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் மட்/ திக்கோடை கணேச வித்தியாலயத்திற்கு இதுவரை என்றுமே வழங்கப்பட்டதில்லை. அதேவேளை இப்பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி 16 ஆகும். இங்குள்ளது 13 மட்டுமே ஆகும். இதேபோல் மட்/ தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயத்திற்கு ஆசிரியர் பற்றாக்குறை -04 ஆகும். மட்/ மண்டூர் இல 40 அ.த.க பாடசாலைக்கு ஆசிரியர் பற்றாக்குறை 03 ஆகும்.

11. கஷ்டப் பிரதேச கொடுப்பனவுகள் இன்மை தொடர்பான பிரச்சினை

வசதிகளற்ற இப்பிரதேசங்களில் பல்வேறு சிரமங்கள், சவால்களுக்கு மத்தியில் வந்து கல்விப் பணி செய்யும் ஆசிரியர்களை ஊக்குவிக்கக் கூடியதான கஷ்டப்பிரதேசக் கொடுப்பனவு வழங்கப்பட்டமையானது ஆசிரியர்களுக்கு பெரும் மனக்கிலேசத்தை உண்டு பண்ணுகின்றது. இது இவர்களின் கற்பித்தல், செயற்பாட்டில் பெரும் பின்னடைவுக்கு காரணமான காரணிகளிலொன்றாக உள்ளது. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடும் பெரிதும் பாதிப்புறுகின்றது. உதாரணமாக ஆசிரியர்களால் லீவுகள் எண்ணி எடுக்கப்படுவதும், பாடசாலைக்கு வரும் வீதம் குறைவதும், நேரம் பிந்தி வருவதும் இதன் பாதிப்புக்களாலும் நிகழ்கின்றன.

12. மாணவர் சார்பான பிரச்சினைகள்

இப்பிரதேச பாடசாலைகளின் மாணவர் தினசரி வரவு குறைந்த வீதத்தில் காணப்படுதல், அத்தோடு நேரம் பிந்தி வருதல், சீரான வரவின்மை, கற்பதில் நாட்டமின்மை, காலை உணவருந்தி வராமை, சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளாமை, வீட்டு வேலைகளாக பாடசாலைகளால் வழங்கப்படும் செயற்பாடுகளைச் செய்து வராமை, பாடசாலைக் கலாசாரத்துக்கு ஒத்துழையாமை, அவர்களுக்கான கற்றல் உபகரணங்களுடன் வராமை, வகுப்பறை வேலைகளை செய்வதில் பின்னிற்றல், இடைவிலகல் போன்றவை கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் நிலவும் மாணவர் சார்பான மிக முக்கியமான பிரச்சினைகளாக உள்ளன.

இவற்றுக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. கல்வியின் பெறுமானத்தை இப் பிரதேசங்கள் உணராமை, பெற்றார்களிடையே கல்வி தொடர்பான விழிப்பின்மை, கல்விப் பயன் இக்கிராமப்புற விவசாயிகளுக்கு உடனடி விளைவை / அறுவடையைக் கொடுக்காமலிருத்தல் பெற்றாரின் அறியாமையும் வறுமை நிலையும், பெற்றார் கல்வியறிவற்றவர்களாக இருத்தல், மாணவர்கள் நீண்டதூரங்கள் பாடசாலைக்கு செல்ல வேண்டி இருத்தல், அவர்களுக்கு பெற்றோர்களால் கொடுக்கப்படும் வீட்டு வேலைகள் முதலியவற்றைக் கூறமுடியும்.

வசதிகளற்ற இப்பிரதேசங்களில் பல்வேறு சிரமங்கள், சவால்களுக்கு மத்தியில் வந்து கல்விப் பணி செய்யும் ஆசிரியர்களை ஊக்குவிக்கக் கூடியதான கஷ்டப்பிரதேசக் கொடுப்பனவு வழங்கப்பட்டமையானது ஆசிரியர்களுக்கு பெரும் மனக் கிலேசத்தை உண்டு பண்ணுகின்றது. இது இவர்களின் கற்பித்தல், செயற்பாட்டில் பெரும் பின்னடைவுக்கு காரணமான காரணிகளிலொன்றாக உள்ளது. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடும் பெரிதும் பாதிப்புறுகின்றது. உதாரணமாக ஆசிரியர்களால் லீவுகள் எண்ணி எடுக்கப்படுவதும், பாடசாலைக்கு வரும் வீதம் குறைவதும், நேரம் பிந்தி வருவதும் இதன் பாதிப்புக்களாலும் நிகழ்கின்றன.

உதாரணமாக பாடசாலை வரும் மாணவர்களும் அக்குடும்பங்களின் உழைக்கும் மாணவர்களாக இருப்பதால் வேளாண்மை வெட்டுதல், விறகு கொத்தி விற்றல், மந்தை மேய்த்தல், கல்வாடித் தொழில் செய்தல், வீட்டுக் காவல் செய்தல், பெறுமதியற்ற தேவைகளுக்கு பெற்றோர்களால் மாணவர்கள் பயன்படுத்தப்படுதல் (வயல் வேலை செய்வோருக்கு மதிய உணவு கொண்டு செல்ல அனுப்புதல்) போன்வற்றைக் கூறலாம்.

13. பெற்றார் சார்பான பிரச்சினைகள்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலைச் சிரமதானம் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்புவிழா, வாணிவிழா, பாடசாலையில் கூட்டப்படும் கூட்டங்கள், போன்றவற்றில் பெற்றார்கள் வந்து கலந்து கொண்டு பங்களிப்பது மிக மிகக் குறைவாகும்.

அத்தோடு மாணவர்களைச் சீராக பாடசாலைக்கு அனுப்பாமை, அவர்களை குடும்ப வருமானத்தின் பொருட்டு வேலைக்கு அமர்த்துதல், பெறுமதியற்ற தேவைகளுக்குப் பயன்படுத்துதல், பாடசாலை வீட்டு வேலைகளை அவர்கள் செய்ய உதவாமை, தாங்கள் போகுமிடங்களில் அவர்கள் பிள்ளைகளையும் அழைத்துச் செல்லல் (திருமணவீடு) போன்றவையும், பெற்றோர்களின் வீட்டுச் சண்டை தந்தையார் மது அருந்துதல், தாய் வெளிநாட்டு வேலை தேடிச் சென்றுள்ளமை, தந்தை மறுமணம் புரிந்துள்ளமை இவையும் பெற்றார் சார்பாக இப் பிரதேச பாடசாலைகள் எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சினைகளாகும்.

எனவே மேற்கூறப்பட்டவற்றைத் தொகுத்து நோக்கும் போது கஷ்டப் பிரதேச கல்விப் பிரச்சினைகளில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதை எம்மால் உணர முடியும். கஷ்டப் பிரதேச கல்விப் பிரச்சினைகள் எவை? என்று பார்க்கும் பொழுதுதான் மட்டக்களப்புப் பிரதேசக் கல்வி நிலைவரம் பற்றிய உண்மை நிலை துல்லியமாக வெளிப்படும்.

# இரு துருவங்களாகியுள்ள கல்வி சீர்திருத்த திட்டங்களும் புலமைப்பரிசில் பரீட்சைகளும்

இலங்கையில் நடைபெறும் நிர்வாக சேவைக்கான ஆட்சேர்ப்பு பொதுப் போட்டிப் பரீட்சை போன்று தரம் 05 க்கு நடைபெறும் புலமைப் பரிசில் பரீட்சைக்கான போட்டிப் பரீட்சையும் அமைவதை தற்போது காணமுடிகின்றது.


பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர். யா/சரவணை சின்னமடு
றோ.க.த.க.பாடசாலை


"படியடா படியடா, கொலர்சிப் சோதனை பெயில் எண்டால் ஒண்டுமே செய்யமுடியாதடா."

"மாடு படி. உனக்கு எத்தனை தடவை சொல்லுறது."

"ரியூசனுக்கு ஓடு நேரமாச்சுது. பேப்பரில் மொடல் பேப்பர் பாத்தனியா? "

"இன்று விசேட கருத்தரங்கு இருக்குதாம் எண்டு பக்கத்து வீட்டு பொடியன் போறான். நீயும் போடா."

"ஜப்பானுக்கு போகவேணுமடா. கவனமாகப் படி."

"இந்த முறை எமது வலயமட்ட கொலர்சிப் பரீட்சை முடிவை உயர்த்திக் காட்ட வேண்டும்."

"பாடசாலை மட்டப் பரீட்சை முடிவைத் திறமாகக் கூட்ட வேண்டும்."

"இன்று பாடசாலை முடிவடைந்ததும் விசேட வகுப்பு உள்ளது."

"கொலர்சிப் படிக்கின்ற மாணவர்கள் எல்லாரும் இன்றும் வடிவாக வரவேண்டும். ஏனென்றால் இன்று இங்கு படித்த மாணவர்களை எல்லாம் படமெடுக்கப் போகிறோம். பேப்பரில் போடுவதற்கு ."

"மாகாண மட்டப் பெறுபேற்றை மற்றைய மாகாணத்தில் இருந்து உயர்த்த வேண்டும்."

"பிள்ளையோ மௌனியாக பல்வேறு நெருக்கீடுகளுக்குள்."

மேலே கூறப்பட்ட வசனங்கள் எல்லாம் எமது பிரதேசத்தில் ஐந்தாம் தர புலமைபரிசில் பரீட்சையை நோக்கமாகக் கொண்டு, பல்வேறு தரப்பினராலும் கூறப்படும் கருத்துக்களாக அமைகின்றன. யார் யார் எக்கருத்துக்களை கூறுவார்கள் என்பது உங்கள் சிந்தனைக்கு.

இலங்கையில் நடைபெறும் நிர்வாக சேவைக்கான ஆட்சேர்ப்பு பொதுப் போட்டிப் பரீட்சை போன்று தரம் 05 க்கு நடைபெறும் புலமைப் பரிசில் பரீட்சைக்கான போட்டிப் பரீட்சையும் அமைவதை தற்போது காணமுடிகின்றது. இதனடிப்படையில் புலமைப்பரிசில் பரீட்சையின் பின்னணி, நோக்கம் வினாத்ததாள் உள்ளடக்கம், 2003 ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழு ஆலோசனைக் குறிப்புக்கள், நடைமுறைப் பிரச்சினைகள் மற்றும் மாற்றுத்திட்டங்கள், பரிந்துரைகள்ள ஆராய்வ-தாக இக்கட்டுரை அமைகிறது.

## புலமைப்பரிசில் பரீட்சையின் பின்னணியும், நோக்கமும்

புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்ப காலங்களில் சமூக, பொருளாதார மட்டத்தில் பின்தங்கியவர்கள் தமது கல்வி வாய்ப்பைப் பெற ஊக்குவிக்கும் நோக்குடன் 1940 களில் அப்போதைய கல்வி அமைச்சராக இருந்த டபிள்யூ. கன்னங்கரா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டிலுள்ள பிரதான, மத்திய மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் பின்தங்கிய மாணவர்கள் அனுமதியைப் பெற்று கல்வியைத் தொடர்வதற்கு புலமைப்பரிசில் வழங்கும் நோக்குடன் அறிமுகம் செய்யப்பட்டு, பின்னர் தாய்மொழி மூலமான கல்வியும் அறிமுகமும் மத்திய பாடசாலைகளில் விடுதிகள் மூடப்பட்டமையும் , அதனால் பிரபல்யமான பாடசாலைகளுக்கு மாணவகளைத் தெரிவுசெய்யும் முறைமையும் முக்கியம் பெறத் தொடங்கின.

## வினாத்தாள் உள்ளடக்க வளர்ச்சி

தொடக்க காலங்களில் புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் விவேகம், எண்கணிதம், தாய்மொழி என்பவற்றை பரீட்சிப்பதாக ஆரம்ப

காலங்களில் இருந்து, பின்னர் 1992 இல் மொழிப்பரீட்சை, கணிதப்பரீட்சை, வினாப்பத்திரங்களில் 3,4,5 தர பாட விடயங்களும் உள்ளடக்கப்படலாயின. அதனைத் தொடர்ந்து உளச்சார்பு பரீட்சை கைவிடப்பட்டு, சிங்களம் தமிழ், கணிதம், ஆகிய இருபாடங்களுக்கான நான்காம், ஐந்தாம் தரப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் பரீட்சை நடைபெற்றது.

புலமைப்பரிசில் பரீட்சை 1995 இல் இருந்து உளச்சார்புப் பரீட்சையும் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை கற்பிக்கப்பட்ட பாட விடயங்களுடன் தொடர்புபட்ட மற்றொரு வினாத்தாள் ஏற்படுத்தப்பட்டது. 1998 இல் இருந்து ஆங்கிலமும், பொது அறிவும் சேர்க்கப்பட்டு, பரீட்சிக்கப்படுகின்றன. பின்னர் 2002 இல் உளச்சார்ப்புப் பரீட்சை சொல் சார்ந்த வினாக்கள், சொல் சார்ந்த வினாக்களுடன் பட, வரைபட குறியீட்டு வினாக்களும் சேர்க்கப்பட்டன.

பரீட்சையை நோக்கிய வழிப்படுத்தலில் பிள்ளையைப் பல்வேறு தரப்பினரும் நெருக்கீடு கொடுக்கும் பொழுது பிள்ளையின் இளம் மனம் அழுத்தத்திற்கு உள்ளாகி மகிழ்ச்சியற்ற சூழ்நிலைக்கும், விரக்தி நிலைக்கும் இட்டுச் செல்வதாக அமைகிறது. அரசு புதிய கல்விச் சீர்திருத்தத்தில் மகிழ்ச்சிகரமான கற்றல், கற்பித்தல் என்ற பிரதான ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்தை அமுல் படுத்தியுள்ள அதே நேரம் இப்பரீட்சை மூலம் உண்மையில் பிள்ளை இயல்பாகவே சந்தோஷத்துடன் பாடசாலைக்கு வருகின்றதா என்பதும் சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது.

## 2003 தேசிய கல்வி ஆணைக்குழுவின் சிபார்சு

தேசிய கல்வி ஆணைக்குழுவின் பொதுக்கல்வி பற்றிய ஆலோசனை அறிக்கையில் இரண்டாம் வினாத்தாள் பற்றிய குறிப்பில் புதிய கல்விச் சீர்திருத்த பிரதான விடயமான அத்தியாவசியமான கற்றல் தேர்ச்சிகளை கணிப்பீடு செய்வதாக அமையவேண்டுமென்று குறிப்பிட்டுள்ளதுடன், இதற்குப் பின்வரும் காரணங்களையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

1. தனியார் போதனையை நாடுவது குறைவடையும்.
2. தேவையற்ற மன அழுத்தத்தைக் குறைக்கும்.
3. கல்விச் சீர்த்திருத்த தேர்ச்சி மைய பரீட்சை உருவாகும்.
4. உதவித் தொகையை 2400 ரூபாவில் இருந்து 5000 ரூபாவாக ஆண்டுக்கு உயர்த்துதல்.

அத்தியாவசியமாகத் தேர்ச்சிகளை வகுப்பறையில் அடையும் மாணவன் , இப்பரீட்சையில் அவற்றினை பிரயோகிக்கும் வகையிலேயே வினாத்தாள் அமையும் என்பது முக்கியம் எதிர்பார்க்கப்படும்

## புலமைப்பரிசில் வழங்குதலின் எதிர்பார்க்கை

குறைந்த பொருளாதார வருமானத்தை உடைய பிள்ளைகளுக்கு பணவசதி வழங்கி, கல்வியைப் பெற ஊக்குவிப்பதுடன் , ஏனைய வசதியுள்ள பிரிவினருக்குத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாடசாலைகளில் அனுமதி பெற இப்பரீட்சை உதவியது. அத்துடன் சமூக அந்தஸ்தையும் இப்பரீட்சை வழங்கியதுடன், பின்னர் இது படிப்படியாக மாற்றம் பெற்று ஒரு போட்டிப் பரீட்சையாகவும், தனியார் போதனையை ஊக்குவிப்பதாகவும், மாணவர்களுக்கு கற்றல் சுமையை கூட்டுவதாகவும், பெற்றோர் கல்வி கற்கும் நிலைக்கும் இட்டுச் செல்வதுடன், பிள்ளையின் மகிழ்ச்சியான செயற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும், மன நோய்க்கு இட்டுச் செல்லும் காரணியாகவும் மாற்றம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

## பரீட்சையின் தாக்கங்கள்

புலமைப்பரிசில் பரீட்சையின் அறிமுகம் நல்ல நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அறிமுகம் செய்யப்பட்டாலும், அதன் அடிப்படை இலக்கு வறுமைப்பட்ட பிள்ளைகளை கல்வி பெற ஊக்குவிப்பதாகும். இந்த நிலை சமகாலத்தில் கேள்விக்குரிய விடயமாகவே மாறியுள்ளது. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களில் பெரும்பாலானோர், அதாவது 70 வீதம் மத்தியதரம், மேல்தர வர்க்கத்தை சார்ந்தவர்களாகவே உள்ளதை அவதானிக்க முடிகிறது. கீழ்த் தர வர்க்க மக்கள் பரீட்சையை எதிர்கொள்வது என்பது கடினமான ஒரு விடயமாக உள்ளதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

பரீட்சையை நோக்கிய வழிப்படுத்தலில் பிள்ளையைப் பல்வேறு தரப்பினரும் நெருக்கீடு கொடுக்கும் பொழுது பிள்ளையின் இளம் மனம் அழுத்தத்திற்கு உள்ளாகி மகிழ்ச்சியற்ற சூழ்நிலைக்கும், விரக்தி நிலைக்கும் இட்டுச் செல்வதாக அமைகிறது. அரசு புதிய கல்விச் சீர்திருத்தத்தில் மகிழ்ச்சிகரமான கற்றல், கற்பித்தல் என்ற பிரதான ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தை அமுல்படுத்தியுள்ள அதே நேரம் இப்பரீட்சை மூலம் உண்மையில் பிள்ளை இயல்பாகவே சந்தோஷத்துடன் பாடசாலைக்கு வருகின்றதா என்பதும் சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது.

தற்போது பிள்கைளை பாடசாலைக்கு விருப்புடன் வரச் செய்யவும், மகிழ்வுடன் கற்கவும் ஏற்ற வகையில் பாடசாலையை கவின் நிலைப்படுத்தி , பிள்ளை நேய பாடசாலை திட்ட நடைமுறையை அமுல்படுத்தி வரும் அதேவேளை, பிள்ளைக்கு வெறுப்பும், மன அழுத்தத்தையும் கொடுக்கும் வகையில் பரீட்சையை அடிக்கடி


பாடசாலையில் இடம்பெறச்செய்வது எந்த வகையில் பொருத்தப்பாடு உடையது என்பது ஆராயப்பட வேண்டியுள்ளது.

பொதுவாகவே போட்டிப் பரீட்சைக்கு முகம் கொடுப்பவர்கள் பெரும் மன அழுத்ததிற்கு உள்ளாகின்றனர் என்பது உளவியல் அறிஞர்களின் முடிவு. வெளிநாடுகளில் இவ் அழுத்தத்தை (STRESS) குறைப்பதற்கான பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. அதிலும் குறிப்பாக வளர்ந்தவர்கள் ஓரளவு மன அழுத்தத்தை தாங்கிக் கொள்வதாகவும், சிறுவர்கள் அதிகளவு பாதிப்புக்குஉள்ளாவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. சுகநலம் என்பது தனியே நோய் வராத நிலை மட்டுமல்ல, அதற்கு ஒருபடி மேலாக உடல், உள, சமூக நன்நிலைமை (WELL BEING) என்பவற்றில் உயர்வு பெறலாகும். நோய் இல்லர்த நிலையை மட்டும் வைத்து சுகதேகிகள் என வரையறுக்க முடியாது. இதன்படி மனஅழுத்தம் தரும் பரீட்சைகள் கூட, ஒருவரின் சுகநலத்தைப் பாதிக்கும் என்பது உண்மையான முடிவு.

இதற்கு 2004 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்கள் செய்த ஆய்வின்படி 41 வீதமான பெற்றோர் குழந்தைகளின் சமூகவியற் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளதாகவும், 54 வீதமானவர்கள் தங்கள் குழந்தைகளின் பொழுது போக்கு நேரம் குறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளமை குழந்தைகளின் இயல்பான சமூகச் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளமை ஆதாரப்படுத்தப்பட்டுள்ளது.

| அட்டவணை I | |
|---|---|
| **காலம்** | **செயற்பாடுகள்** |
| காலை 4.00 | நித்திரை விட்டு எழும்புதல் |
| 4.00 - 7.00 | காலை நேரப் படிப்பு |
| 7.00 - 8.00 | காலைக் கடமைகள் , |
| 8.00 | பாடசாலை புறப்படல். |
| 8.30 - 2.30 | பாடசாலையில் கற்றல் |
| 3.00 - 5.30 | பாடசாலையில் மேலதிக வகுப்பு |
| 6.00 - 7.00 | விசேட ஆங்கில வகுப்பு |
| 7.30 - 10.30 | வீட்டில் சுயகற்றல் |

அட்டவணை 1 ஊடாக எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் சராசரி ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் பிள்ளை எவ்வாறு நாளாந்தம் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுகின்றான். என்பது காட்டப்பட்டுள்ளது. இதற்குப் பெற்றோர், பாடசாலை, சமூகம், தனியார் கல்விநிறுவனங்கள், சமூகப்பொருளாதார அந்தஸ்து போன்ற காரணிகளாக அமையச் சந்தர்ப்பமுண்டு. இச் செயற்பாடு 10 வயதுப் பிள்ளைக்கு எந்தவகையில் உடல், உளரீதியில் பொருத்தமானதாக அமையும் என்பது கேள்விக்குறியாக உள்ளதுடன் - கல்வியாளர்கள், உளவியலாளர்கள் சிந்திக்க வேண்டியுள்ள விடயமாகவும் உள்ளது.




அட்டவணை 11 ஊடாகப் பிள்ளை ஏற்படுத்தப்படும் பல்வேறு அழுத்தம், மற்றும் சுய ஊக்கம் என்பவற்றால் எந்தெந்த வகுப்பு மட்டங்களில் தன்னுடைய கற்றல் வேகத்தை அதிகரித்துக் கொள்கிறது. பின்னர் எவ்வாறு ஓய்வெடுக்கின்றது என்ற போக்கை அவதானிக்க முடிகிறது. பரீட்சையை நோக்கிய படிப்பு என்பது வாழ்வுக்குப் பயன்படுமா என்பது பற்றியும், மதிப்பீடு கலாசாரத்தில் இருந்து கணிப்பீட்டு கலாசாரத்துக்கு வந்து விட்டோம் என்று கூறும் கல்வியியல் அதிகாரிகளும் சிந்திக்க வேண்டிய விடயமாக உள்ளது.

ஆரம்பப் பாடசாலைகளில் காணப்படும் பாடசாலை அனுமதிக்கான டொனேசன் பெறுதல் மற்றும் பரீட்சை நோக்கிய பல்வேறு சமூகத்தினரின் நெருக்கீடுகள் மற்றும் அழுத்தம் காரணமாக நாடளாவிய ரீதியில் ஆரம்பப் பாடசாலைக்கு மாணவர் சேரும் வீதம் குறைவடைந்து வருவதை மத்திய வங்கி அறிக்கை அட்டவணை 111 மூலம் காட்டப்பட்டுள்ளதுடன், அட்டவணை IV மூலம் ஆண், பெண் சேர்வு வீதமும் காட்டப்பட்டுள்ளது.

| அட்டவணை III | |
|---|---|
| **ஆண்டு** | **மாணவர் எண்ணிக்கை** |
| 2000 | 332 802 |
| 2001 | 330 316 |
| 2002 | 325 763 |
| 2003 | 316 344 |

| அட்டவணை IV (2004 உலக சிறுவர் நிலை அறிக்கை) | | | |
|---|---|---|---|
| இலங்கை | | | |
| 1997 | | 2000 | |
| ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 107 | 104 | 97 | 97 |

அண்மையில் இம்முறை பரீட்சை எடுக்கத் தகுதியுடைய தரம் 5 பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு இடையிலான பெறுபேற்று போட்டி நிலைமை காரணமாகக் கல்வியில் பின்தங்கியுள்ள மாணவரை தோற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட சம்பவங்களும், தண்டனை வழங்கப்பட்டு, உள உடல் ரீதியல் பாதிப்படைந்து, யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற மற்றும் சிறுவர் உரிமை மீறல் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்ட உளநல ஆற்றுப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பல்வேறு சம்பவங்கள் அண்மையில் யாழ். நகர மைய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஏற்பட்ட சம்வங்கள் புலமைப்பரிசில் பரீட்சையின் தாக்கத்தை உணர்த்துவதாக உள்ளன.

பிள்ளையின் உள வயதுக்குப் பொருத்தமற்ற வகையில் கற்றல், கற்பித்தல் அழுத்தங்கள் - இதேவேளை வீட்டில் பெற்றோரின் அழுத்தங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை மறைக்கப்பட்ட சம்பவங்களாக உள்ளமையும் அவதானிக்க முடிகிறது. பிள்ளையின் பரீட்சைக்கு வழி காட்டும் வகையிலான பல்வேறு கருத்தரங்குகள், பரீட்சை மாதிரிகள் என்பன யாழ்ப்பாணத்தில் பல்வேறு வகையில் இடம் பெறுவதை அட்டவணை V, VI காட்டி நிற்கிறன.

| அட்டவணை V |
|---|
| **கருத்தரங்குகள்** |
| ■ பாடசாலையில் நடைபெறுவது |
| ■ அரசசார்பற்ற நிறுவனம், |
| ■ தனியார் கல்வி நிறுவனம், |
| ■ பத்திரிகை நிறுவனங்கள் |
| ■ தனிப்பட்ட ஆசிரியர்களினால், ஊடகம் வழியிலான குறிப்புகள். |
| ■ சமயம் சார்பான அமைப்புகள். |

| அட்டவணை VI |
|---|
| **பரீட்சைகள்** |
| ■ தனியார் கல்வி நிறுவனம் |
| ■ பாடசாலைகள் மட்டம். |
| ■ கல்வித் திணைக்கள மட்டம் |
| ■ மாகாணமட்ட பரீட்சை |
| ■ சமய நிறுவனங்கள் |
| ■ இந்து கலாசார அமைச்சு |
| ■ தனியார் ஆசிரியர்கள் |
| ■ பத்திரிகையில் வெளிவருவது |
| ■ வேறு மாவட்ட வினாத்தாள் |
| ■ மாதிரி பயிற்சிப் புத்தகங்கள் |
| ■ பெற்றோர் தயாரிப்புப் பரீட்சை |

கல்விக்கான வாய்ப்புக்கள், வசதிகள் என்பன அற்றதாகக் காணப்படும் பொழுது, பொதுவான பரீட்சை வினாத்தாள் எந்தளவிற்குக் கல்வியில் பின்தங்கிய, கஷ்டப்பிரதேச மாணவர்களுக்கும், நகரப்புற மாணவர்களுக்கும் ஒரே தன்மையுடையதாக அமையும் என்பதும் இலவசக் கல்வியின் செயல்வடிவம் மாற்றம் பெறுதலும், குழந்தைகளுக்கான பரீட்சை என்பதில் இருந்தும் போட்டி என்பதில் இருந்தும் பெற்றோருக்கான பரீட்சை அவர்களுக்கு இடையிலான போட்டியாக மாற்றம் பெற்று இருப்பதைக் காணமுடிகிறது.

மேலும் பொதுவாக பரீட்சைக்கு அமையவுள்ள வினாத்தாள் என்பதை விட, உள்ளூர் மட்டத்திலும் மாதிரியாகத் தயாரிக்கப்படும் வினாத்தாள்களும் பொது நிர்வாக சேவைக்கு (SI,AS) ஆட்களைச் சேர்க்க இடம்பெறும் பரீட்சை வினாத்தாள்கள் போன்று தயாரிக்கப்படுவதும், ஆசிரியர் தன்னுடைய திறமையை ஏனைய ஆசிரியர்களிடமிருந்து வேறுபடுத்தி காட்டவும், பிரபல்யம் பெறவும். இத்தகைய நுட்பமுறையைக் கையாள்வது பிள்ளைக்குப் பரீட்சை மீது அதிக வெறுப்பையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துவதாக அமைகிறது.

ஆசிரியரைப் பொறுத்தவரையில் புதிய கல்விச் சீர்திருத்தம் மற்றும் கல்வி அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயல்மூலமான கற்றல், மகிழ்ச்சிகரமான கற்றல், தேர்ச்சி முறையிலான அடைவு, கணிப்பீடு என்ற அடிப்படையில் செயற்பட்டு தமது வகுப்பறைச் செயற்பாட்டை முன்னெடுக்கும் போது பரீட்சை வினாத்தாள் இச்செயற்பாட்டிற்கு முற்றிலும் மாறான வகையில் பிள்ளையின் உளச்சார்புடனான வினாவாகவும், பொது அறிவை அளப்பதற்கான மதிப்பீட்டு முறைமை எந்தளவிற்கு கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிற்கும் பரீட்சைக்கும் இடையில் ஒத்தத்தன்மையைப் பேணும் என்பதும் சிந்திக்கப்படவேண்டியுள்ளது.

புதிய கல்விச் செல்நெறிகள் வலுப்பெறும் இக்கால கட்டத்தில் பிள்ளையை புள்ளி முறையில் மதிப்பீடு செய்து அவர்களை வேறுபடுத்திக் காட்டுவது எந்தவகையில் பிள்ளையின் மன இயல்புக்குப் பொருத்தமானதாக அமையும் என்பதும், ஒப்பிட்டுப் பார்த்தல் என்பதும் பிள்ளையின் எதிர்கால ஊக்கத்தையும், விருத்தியையும் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிப்பதாக அமையும்.

## சிபாரிசுகள்

பரீட்சை விடயம் தொடர்பாக கல்வித்திணைக்களம் விரிவான ஆய்வை மேற்கொண்டு, அதற்கு ஏற்ப பரீட்சைக்குப் பதிலாகவோ அல்லது உள்ளடக்கத் தன்மையிலோ, மாற்றங்களைக் கொண்டு வருவதுடன், கஷ்டப் பிரதேச மாணவர்கள் புலமைப் பரிசில் வாய்ப்பைப் பெறுவதற்கு கோட்ட முறையை அறிமுகம் செய்ய

முடியும். இதன் மூலம் வறுமைப்பட்ட பிள்ளைகள் ஓரளவு கல்வியில் சமநிலையை ஒப்பீட்டு ரீதியில் பெறமுடியும்.

பாடசாலை அனுமதிக்கு வேறு ஒரு பரீட்சையை நடைமுறைப்படுத்தி, அதனூடாக மேல்தர வர்க்கத்தை அப்பரீட்சை மீது நாட்டம் கொள்ளச் செய்வதுடன், புலமைப் பரிசில் பரீட்சை மூலம் கீழ்த்தர வர்க்க மக்கள் சந்தர்ப்பம் பெற வாய்ப்பளிக்க முடியும். மேலும் பிள்ளையின் உள வயதிற்கேற்ற வகையிலான வினாத்தாள் தயாரிக்கை உறுதிப்படுத்தல் மிகவும் அவசியமாகவுள்ளது.

ஐந்தாம் தர பரீட்சையை ஒன்பதாம் தர நிலைக்கு மாற்றுவது தொடர்பான முன்மொழிவும், ஓரளவுக்கு பிள்ளைக்கு சாதகமானதாக அமைய வாய்ப்புண்டு. வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் மற்றும் புதிய கல்விச் சீர்திருத்த அடைவு நிலைக்கு ஏற்ப பொதுப் பரீட்சை முறையை ஒழுங்கு செய்தல் பிள்ளைக்குப் பொருத்தமானதாக அமையும்.

இயன்றவரை புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாற்றீடாக கணிப்பீட்டு முறையிலான நடைமுறையை பின்பற்றுகின்ற போது, கல்விக்காக செலவிடும் மூலதனமும், பிள்ளையின் உளரீதியான மற்றும் உரிமையை மீறும் சம்பவங்களும் இடம்பெற வாய்ப்பு இல்லாமல் போகும். அத்துடன் சமூகத்தின் மத்தியிலும், பெற்றோர், மாணவர் ஆசிரியர் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி என்பனவும் குறைவடையும்.

பிள்ளை நேயமான பாடசாலை உருவாக்கம், தேர்ச்சி மைய கலைத்திட்டம், செயல்முறையிலான கற்கை மகிழ்ச்சிகரமான கற்றல், இயல்பாகப் பிள்ளை கற்றல், சுயமாகக் கற்றல், பிரயோகக் கல்வி, தீர்மானங்களை எடுக்கத் தூண்டுதல் போலச் செய்தல் மூலமான கற்றல், அபிநயத்துடன் கூடியகற்றல், முழுமையான ஆளுமை விருத்தி ஏற்படச் செய்தல், ஆசிரியர் பிள்ளையை வழிப்படுத்துவதே தவிர போதனையை போதிப்பவர் அல்ல. பிள்ளையை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. பிள்ளையை இருக்கின்ற அடைவில் இருந்து அவனுடன் இயைந்து அவனை உயர் அடைவு மட்டத்திற்குக் கொண்டு செல்லல், தேர்ச்சியைக் கணிப்பிடல், பல்தரக் கற்பித்தல், நுண்முறை கற்பித்தல், விளையாட்டுமுறை ஊடாகக் கல்வி பெறல் என்ற புதிய சிந்தனைப் போக்கு எந்தவகையில் புலமைப்பரிசில் மற்றும் ஏனைய பொதுப் பரீட்சை முறைக்கும் பொருத்தமானதாக அமையும் என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயமாக உள்ளது.

## நிகழ்வுகள்

## மட்டக்களப்பு கல்வியாளர்களின் ஒன்றுகூடல்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் மொழிவழிக் கல்வி எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் சவால்களையும் இனங் காணவும் எதிர்காலத்தில் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றியும் திட்டமிலுக்கான முன்னாயத்த ஒன்று கூடல் கடந்த 2005-11-30 ஆம் திகதி மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

மட்டக்களப்புச் சமூகத்தின் மீது கல்வி அக்கறை கொண்ட பல்துறையாளர்கள் இணைந்து செயலாற்ற வேண்டிய தேவை நம்முன்னுள்ளது. இதனை உணர்ந்து கொண்டதன் காரணமாகவே இத்தகைய ஒன்று கூடல் ஏற்பாட்டை 'அகவிழி' மேற்கொண்டது.

குறிப்பாக கிழக்குப் பல்கலைக்கழகம், கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை திறந்த பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் கல்வித் திணைக்களம், தன்னார்வக் கல்வி நிறுவனங்கள், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட நிறுவனங்களின் ஒருங்கிணைவு அவசியமாக உள்ளது. அத்துடன் பல தனிநபர்களையும் ஆர்வலர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இந்த நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் ஒன்று கூடல் திட்டமிட்டப்பட்டிருந்தது. அதனை நிறைவு செய்யும் வகையில் அனைத்துப் பிரிவினரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்கள்.

மா.செல்வராஜா (கி.ப.க. கல்வியல்துறை) பேரா.சி.மௌனகுரு (கி. ப.க) எஸ். பாக்கியராஜா (பீடாதிபதி (கல்வியல் கல்லூரி) க.விநாயகமூர்த்தி (அதிபர் ஆசிரியர்கலாசாலை) மு.பவளகாந்தன் (கல்விப் பணிப்பாளர் மட்டக்களப்பு) மு. இரா. ராஜரத்தினம் (அதிபர் மட் / இந்துக்கல்லூரி ) ஆகியோர் வழிகாட்டிகளாக இருந்து ஆலோசனை வழங்கி ஒன்றுகூடல் சிறப்பாக நடைபெற துணையாக இருந்தார்கள். இந்த ஒன்று கூடல் கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.சி.ரவீந்திரநாத் தலைமையில் நடைபெற்றது .

தற்போதைய கல்விப் பிரச்சினைகள் பற்றி பலரும் தத்தம் நிலைகளில் இருந்து கருத்துத் தெரிவித்தார்கள். மூன்று நாள் முழுமையான ஆய்வுக் கருத்தரங்கு நடத்துவதற்கான பிரச்சினை மையங்களை அடையாளப் படுத்தினார்கள். இந்த ஆய்வுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்கள். பலரும் இயல்பாக தமது அறிவு அனுபவம் சார்ந்து கருத்தாடலில் பங்கு கொண்டார்கள். இது போன்ற ஒன்று கூடல் தற்போது மட்டக்களப்பு வேண்டியுள்ள பணிகளில் சிறப்பாக இருக்கும் என்றும் பலரும் அபிப்பிராயப்பட்டார்கள்.கருத்தரங்கை திட்டமிடுவதற்கு ஒரு வளவாளர் குழு உருவாக்கப்பட்டது. அதன்படி பிப்ரவரி முதல் வாரத்தில் கருத்தரங்கு நடைபெறும்.

அகவிழி ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த காசுபதி நடராஜா அனைத்து ஒழுங்குகளுக்கும் பொறுப்பாக இருந்து செயற்பட்டார். அகவிழி ஆசிரியர் தெ. மதுசூதனனும் கலந்து கொண்டு ஒன்று கூடலின் நோக்கம், தேவை என்பவற்றை வலியுறுத்திக் கூறினார். இது போன்ற ஒன்று கூடல் மட்டக்களப்பு கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க நிகழ்வு என்றே பலரும் அபிப்பிராயப்பட்டார்கள்.

— கா.ந —

# கல்வியும் கலைத்திட்ட அமுலாக்கமும்

கலைத்திட்ட அமுலாக்கத்தை அதிபர் மேற்கொள்ளும் போது, கைக்கொள் ளப்படும் கோட்பாடுகள் நடைமுறை யில் முரண்படுகின்றன. உதாரணமாக சமூகப் பங்களிப்பை அனுமதிக்கும் போது சிலவேளைகளில் வேண்டாத தலையீடுகள் ஏற்படுகின்றன. அதே போல் பாடச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது இணைந்த பாடச்செயற்பாடுகள் பலவீனமடைகின்றன. மரபுகளை பேணும் போது நவீனங்களின் உள்வருகை தாமதமடைகின்றது. இவ்வாறான பலவிடயங்களில் பாட சாலை அதிபர் ஒருவர் முரண்நி லையை பல சந்தர்ப்பங்களில் அனு பவிக்க வேண்டியவராகின்றார்.

க.மு.கனகலிங்கம்
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஒரு நாடு தனது தேசிய கல்விக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக கலைத்திட்டங்களை வடிவமைக்கின்றது. கலைத் திட்டம் என்பது "கல்வியின் ஓடுபாதை" "பாடவிதானம்," "பாட ஏற்பாடு" என்ற பெயர்களினாலும் அழைக்கப்படுகின்றது. உலக நாடுகளின் கல்வி மேம்பாடானது அந்தந்த நாடுகளின் கலைத் திட்ட அமுலாக்கத்திலேயே தங்கியுள்ளது. கலைத்திட்ட அமுலாக்கத்தை நடைமுறைப்படுத்து-பவர்களின் அறிவு, செயற்றிறன், வகை கூறும் மனப்பாங்கு, குழுவாகச் செயற்படுதலில் திருப்தி காணல் சகிப்புத் தன்மை தன்னெடுப்பூக்கம் அனுபவங்களை ஒழுங்கமைத்தல் போன்ற ஆளுமைப் பண்புக் கூறுகளிலும் புறக்காரணிகளான பாடசாலையின் பௌதீக வளங்கள், அரசியல், சமூக , பொருளாதார, நிலைமைகள், மெய்யியல், சமய, விஞ்ஞான தொழில் நுட்பப் பண்புகள் போன்றவற்றிலிருந்தே அமுலாக்கத்தின் விளைவுகள் வேர்கொள்கின்றன.

பாடசாலை மட்டத்தில் கலைத்திட்ட அமுலாக்கத்திலே பிரதான வகிபாகங்களை வகிக்கும், அதிபர், ஆசிரியர், சமூகம், பற்றிய திற-னாய்வுகளை மறுவாசிப்புக்குட்படுத்தி, அமுலாக்கத்திற்கு தடையாயுள்ள காரணிகள் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்களில் கல்வி வீழ்ச்சியடைந்து செல்கின்றது என்ற கருத்து இன்று பலராலும் முன்வைக்கப்படுகின்றது. இதனுடைய உண்மைத் தன்மையை பகிர்ந்து கொள்ளும் விருப்புடன் இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

## கலைத்திட்ட அமுலாக்கமும் அதிபரும்

பாடசாலைக் கலைத்திட்டத்தை அமுலாக்கும் முதல் நிலை முகாமையாளராக (First line Maneger)அதிபர் விளங்குகின்றார். அதிபரின் ஆளுமைப்பண்பின் பொருத்தப்பாட்டிலேயே அமுலாக்கத்தின் வெற்றி தோல்வி தங்கியுள்ளது. அண்மித்த மேற்பார்வையாளராகக் கருதப்படும் அதிபர் சிறந்த கல்வியறிவும் செயற்றிறனும் மிக்கவராக இருக்க வேண்டும். அதாவது தேர்ச்சியுடையவராக (Competence) இருத்தலோடு கலைத்திட்ட அமுலாக்கத்தில் சிறந்த வினையாற்றுகையுடன் (Performents) செயற்பட்டு விளைதிறனை (Effectiveness) உண்டாக்க வல்லவராக இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.கலைத்திட்ட அமுலாக்கத்திலே வகைகூறும் (Accountability) வகிபாகம் அதிபரிடத்திலே விடப்பட்டுள்ளது.

கலைத்திட்ட அமுலாக்கத்தை அதிபர் மேற்கொள்ளும் போது, கைக்கொள்ளப்படும் கோட்பாடுகள் நடைமுறையில் முரண்படுகின்றன. உதாரணமாக சமூகப் பங்களிப்பை அனுமதிக்கும்போது சிலவேளைகளில் வேண்டாத தலையீடுகள் ஏற்படுகின்றன. அதேபோல் பாடச் செயற்பாடு-களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது இணைந்த பாடச்செயற்-பாடுகள் பலவீனமடைகின்றன. மரபுகளை பேணும் போது நவீனங்களின் உள்வருகை தாமதமடைகின்றது. இவ்வாறான பலவிடயங்களில் பாடசாலை அதிபர் ஒருவர் முரண்நிலையை பல சந்தர்ப்பங்களில் அனுபவிக்க வேண்டியவராகின்றார். தமிழர் பிரதேசங்களில் கடமையாற்றும் அதிபர்கள் இறுக்கமான அரசியல், சமூக, பொருளாதார பிரதேச வேறுபாடுகள் காரணமாக பல்வேறு சவால்களுடன் கடமையாற்ற வேண்டியுள்ளது.

நடைமுறையிலே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதிபரின் இயலுமை பற்றிய வினா எழுப்பப்படுகின்றது. இலங்கை முழுதிலும் இருக்கும் 10,318 பாடசாலைகளிலும் கடமைபுரியும் அதிபர்களுக்கு வாண்மையை அதி-கரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதும் அவை

போதுமானவையல்ல. மேலும் இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்களில் அதிபர் நியமனங்கள் நீண்டகாலமாக உரிய முறையில் நிரப்பப்படாமல் இருந்துள்ளது. தற்காலிகமாக நியமிக்கப்படும் பதில் அதிபர்களிடமிருந்து உள நிறைவுடன் கூடிய முழுமையான வினையாற்றுகையை எதிர்பார்க்க முடியாதுள்ளது.

எனவே பாடசாலை மட்ட முதல் நிரை முகாமையாளரான அதிபர்களின் நியமனம், இடமாற்றம், போன்றவற்றை கல்வித்தகுதி, அனுபவம், மற்றும் ஆளுமைப்பண்புகளை அடிப்படையாக வைத்தே மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் விரைந்து மாற்றமடைந்து வரும் நிலைமைகளுக்கு ஏற்ப அதிபரால் கலைத்திட்ட அமுலாக்கத்தை மேற்கொள்ள முடியும்.

**விரைந்து மாறிக்கொண்டிருக்கும் தகவல் தொழில்நுட்ப யுகத்தில் கல்வியில் விஞ்ஞான தொழி—நுட்பத்தைப் பிரயோகிக்கும் ஆற்றல் எல்லோருக்கும் இல்லை. அதுவும் கடந்த இரு சகாப்தங்களாக போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் ஆசிரியர்களின் நிலை கவலையளிப்பதாகவுள்ளது.**

## ஆசிரியர்களும் நெருக்கடியும்

கலைத்திட்ட வடிவமைப்புக்கள் எத்தகைய நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்டாலும் இலட்சிய நிலையிலிருக்கும் கலைத்திட்டத்தை யதார்த்த நிலைக்கு மாற்றி உரிய இலக்கை அடைய வைப்பவர்கள் ஆசிரியர்களே. அதாவது மாற்றத்தை ஏற்படுத்தும் பிரதான முகவர்களாகவும் செயற்பாட்டாளர்களாகவும் ஆசிரியர்கள் விளங்குகின்றனர்.

1992 யூனில் வெளியிடப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையில் 80% மான ஆசிரியர்கள் தமது கடமையை செவ்வனே நிறைவேற்ற முயற்சிக்கின்றார்கள் என்றுள்ளது. எனினும் விரைந்து மாறிக்கொண்டிருக்கும் தகவல் தொழில்நுட்ப யுகத்தில் கல்வியில் விஞ்ஞான தொழிநுட்பத்தைப் பிரயோகிக்கும் ஆற்றல் எல்லோருக்கும் இல்லை. அதுவும் கடந்த இரு சகாப்தங்களாக போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் ஆசிரியர்களின் நிலை கவலையளிப்பதாகவுள்ளது.

"அலுவலகம் இருக்கும் கடதாசி இருக்காது" என்ற எதிர்வு கூறும் வாசகத்திற்கு அமைய எதிர்காலத்தில் கணினி மென்பொருள்களின் பாவனையே மேலோங்கியிருக்கும். எனவே எதிர்காலத்தில் கலைத்திட்ட அமுலாக்கத்தை மேற்கொள்ளும் எல்லா ஆசிரியர்களும் நவீன தகவல் தொழில்நுட்பத்தில் இயலுமை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

அதிபர்களைப் போன்றே ஆசிரியர்களும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். நல்ல விழுமியத்தை மாணவரில் ஏற்படுத்த முற்படும் ஆசிரியர் ஒருவர், மரபு ரீதியான விழுமியங்களுக்கும், தற்கால நடைமுறை வாழ்க்கைக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தும் ஒரு மாதிரிப் (Model) பாத்திரமாக தன்னை மாற்றியமைப்பதில் இடர்படுகின்றார். உதாரணமாக "பொய் பேசுதல் கூடாது" என்ற எண்ணக் கருவை மாணவரில் ஏற்படுத்திவிட்டு "சுனாமி நிவாரணம்" போன்றவை அமுலாக்கும் போது, "பொய் பேசாத" மாதிரி மனிதனாக தன்னை நிலைநிறுத்த முற்படும் ஆசிரியர் ஒருவர், பல இழப்புக்களைச் சந்திக்க வேண்டியேற்படுகின்றது.

சமூகத்தில் நடக்கும் போட்டி காரணமாக தனது தனியாளுமையை நிலைநாட்ட முடியாமல் இருக்கும் சந்தர்ப்பங்களில் தப்பித்தல் வழி முறைகளை ஆசிரியர் பின்பற்ற வேண்டியுள்ளது. இதன்போது பலவிதமான அந்நியமாதல் (Alienation)

"ஏர்னெஸ்ட் சார்ச்ரெல்" (Ernest Schachtel) என்பவர் 'அந்நியப்படல்' என்பதை நான்கு பிரிவாக வகையீடு செய்கின்றார்.

1. இயற்கையில் இருந்து அந்நியப்படல்
2. தன்னோடானவர்களிலிருந்து அந்நியப்படல்
3. தனது பணித்திறனிலிருந்து அந்நியப்படல்
4. தன்னிலிருந்து அந்நியப்படல்.

இதிலே "தனது பணித்திறனிலிருந்து அந்நியப்படும் நிலை ஏற்படும்போது கலைத்திட்ட அமுலாக்கம் உரிய இலக்குகளை எய்த முடியாதுள்ளது. தமிழர் பிரதேசங்களில் இவ்வாறான நிலைமைகள் இருப்பதை, சில குறிகாட்டிகள் வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக தொழில்சார்ந்த பொதுப் பரீட்சைகளில் குறைவான புள்ளிகள் பெறுதல், வாண்மையை மேலுயர்த்தும் நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றின் குறைவான விற்பனை , போன்வற்றைக் கூறலாம். ஆசிரியர் எதிர்நோக்கும் நெருக்கடிகள் வலுவற்றதாகும் போது கலைத்திட்ட அமுலாக்கம் முழுமைபெறும்.

## ஆசிரியர் மாணவர் வீதம்

கலைத்திட்ட அமுலாக்கத்திலே மற்றெல்லாவற்றையும் விட ஆசிரியர் மாணவர் விகிதம் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆசிரியர் மாணவர் விகிதம் குறைவாகவுள்ள போதே சிறந்த கல்வி அடைவுகள் கிடைக்கின்றன. முன்னேறிய நாடுகள் சிலவற்றின் ஆ.மா.வி கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| பிரித்தானியா | - 19 |
| அவுஸ்திரேலியா | -17 |
| யப்பான் | - 21 |
| கனடா | -15 |
| நோர்வே | -6 |


(2004 - Enharta)

சிசுமரணவீதம், ஆயுள் எதிர்பார்க்கைக் காலம், எழுத்தறிவு வீதம் போன்றவைக்கும் ஆசிரியர் மாணவர் விகிதத்திற்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. அதாவது ஆசிரியர்

மாணவர் விகிதம் குறைவாக இருக்கும் நாடுகளில் கல்வி அடைவும் நலமேம்பாடும் உயர்வாகவுள்ளது.

ஆசிரிய மாணவர் விகிதம் உயர்வாக உள்ள நாடுகளில் கல்வி அடைவும் நலமேம்பாடும் குறைவான அடைவுகளைக் காட்டுகின்றன. இதற்கு உதாரணமாக நேபாளம், பாகிஸ்தான், நைஜீரியா, சிம்பாப்வே, மாலைதீவு போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். இங்கே தரப்பட்டுள்ள வரைபு -1 இனை அவதானிக்கும் போது, வளர்ச்சியடைந்த நாடுகளான பிரித்தானியா நோர்வே, அவுஸ்திரேலியா, யப்பான், கனடா போன்றவை ஆசிரிய மாணவர் விகிதத்தைக் குறைவாக பேணும் போது, சிசுமரணவீதக் குறைவும், ஆயுள் எதிர்பார்க்கை அதிகரிப்பு போன்ற நலமேம்பாடுகளும், எழுத்தறிவு அதிகரிப்பு போன்ற கல்வி அடைவும் மேம்பட்டு இருப்பதை அவதானிக்கலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஆசிரியர் மாணவர் வீதம் 22.1 எனக் காட்டப்பட்ட போதும் தமிழர்




பகுதிகளிலேயே ஆசிரியர் மாணவர் விகிதம் உயர்வாக உள்ளமையை (வரைபு -2) காட்டுகின்றது. வரைபினை பொதுவாக நோக்கும் போது மொனராகலை தவிர்ந்த ஏனைய சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் ஆசிரியர் மாணவர் விகிதம் குறைவாக உள்ளமையை நோக்கலாம். எனவே கலைத்திட்ட அமுலாக்கத்தில் தமிழர் பகுதிகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்பட வேண்டும்.

மேலும் "கந்தோர் மயவாக்கம்" காரணமாக ஆசிரியர்கள் தன்னெடுப்பூக்கம் இழந்து வருகின்றனர் என்றும், சான்றிதழ் பெறும் நோய் (Diploma disease) காரணமாக உரிய வேலைத்திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றனர் என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன என்பதும் கவனிக்கப்படவேண்டும். ஆகப் பிந்திய தகவலின்படி - இலங்கையில் தமிழர் பகுதிகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறை பின்வருமாறு


| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | - 1037 |
| கிளிநொச்சி | - 382 |
| முல்லைத்தீவு | - 424 |
| வவுனியா | - 560 |
| மட்டக்களப்பு | - 1087 |
| அம்பாறை | - 571 |
| திருகோணமலை | - 691 |
| மலையகம் | - 4088 |

ஏனைய எல்லாச் சிங்கள பிரதேசங்களின் ஒட்டு மொத்த ஆசிரியர் பற்றாக்குறை 1807 ஆகும். இதிலிருந்து ஆசிரியர்வளப்பகிர்வு சீராக இல்லை என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

பிரதேச ரீதியாக அல்லது மொழி வாரியாக ஆசிரியர் மாணவர் வீதம் வேறுபட்டு நிற்பதோடு, பாடசாலை மட்டத்திலும் ஆசிரியர் பகிர்வு சமமற்றுக் காணப்படுகின்றது. உதாரணமாக ஒரு பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறையென்ற நிலை வரும்போது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆரம்ப வகுப்புகளிலேயே ஆசிரிய வெற்றிடம் உருவாக்கப்பட்டு அதற்கு தொண்டர் ஆசிரியர்களை நியமிக்கப்படுகின்றனர். எதுவித பயிற்சியுமற்ற தொண்டர் ஆசிரியர்கள் உரிய கலைத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்க்க முடியாது

பாடசாலை மட்டத்திலேயும் ஆசிரியர் மாணவர் விகிதம் உரியவாறு பேணப்பட வேண்டும். ஆரம்பக்கல்வி போன்ற குறிப்பிட்ட பிரிவுகளில் கடமையாற்ற பல ஆசிரியர்கள் தயங்குகின்றார்கள். இவ்வாறான பிரிவுகளுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுத்து ஆசிரியர் பரம்பலை சீராக வைத்திருக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இலங்கையில் புதிய கல்விச்சீர்திருத்தங்கள் மூலம் கலைத்திட்ட மாற்றங்களை ஏற்படுத்தும் போது, களநிலைமைகளின் பொருத்தப்பாடின்மை காரணமாக அமுலாக்கலிலே தோல்வியைச் சந்திக்க வேண்டியேற்படுகின்றது. அண்மையிலே புதிய கல்விச் சீர்திருத்தம் அமுலுக்கு வந்தபோது கணிப்பீடுகளின் எண்ணிக்கை, பதினெட்டு அம்சப்பண்புவிருத்தி, முனைவுவரைபுகள், போன்வற்றில் இருந்த இறுக்கமான நடைமுறைகள் நாளடைவில் நெகிழ்ச்சியுள்ளவையாக மாறியுள்ளன.




(வரைபு -2)

கல்விநுட்பத்தின் அடிப்படையான எண்ணக்கருவான "எளிதிலிருந்து சிக்கலானதிற்கு செல்லல்" (Simple to complex) என்ற கோட்பாடு இங்கே கவனிக்கப்படவில்லை. இந்த நிலைமையினால் போரினால் பாதிப்புற்றுள்ள தமிழர் பிரதேசம் அதிகளவு முரண் நிலையை அனுபவித்துள்ளது.

### கவன ஈர்ப்பும் கலைத்திட்ட அமுலாக்கமும்

தற்போது தமிழர்கல்வியின் நிலை வீழ்ச்சிப்போக்கைக் காட்டுவதற்குரிய பிரதான காரணங்களிலொன்று பாடசாலைச் சமூகமும் ஏனையோரும், மீத்திறனுள்ள மாணவர் தொகுதியை மையப்படுத்தி தமது கவனயீர்ப்பைக் குவியப்படுத்துகின்றனர். இதனால் பெரும்பான்மையாக இருக்கும் கற்றலில் பலவீனமான, ஆபத்து விளிம்பில் உள்ள மாணவர்கள் கவனயீர்ப்புப் பெறாதிருக்கின்றனர்.

கிறிஸ்தவ உவமைக் கதைகளிலே வரும் "மனம் திருந்திய மகன்" "கணாமற்போன ஆடு" போன்ற கதைக்கருக்கள் வழிதவறியோருக்கு உதவுதல் என்ற எண்ணக்கருவை விளக்குவதோடு பலவீனமானவர்கள் பக்கமே கவனம் குவிக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக்குகின்றன. பாரதப் போரிலேயும் கண்ணன் நூற்றியொருவர் பக்கம் நிற்காமல் பஞ்சபாண்டவருக்கே ஆதரவு அளித்தார். எனவே கலைத் திட்டச் செயற்பாடுகள் கற்றலில் பின்தங்கிய பிரிவினரை மையப்படுத்தி வழிப்படுத்தப்பட வேண்டும்.

தமிழர் வாழும் பகுதிகளிலே நாற்பது வீதமானவை தரம் -1 தொடக்கம் தரம் -5 வரையான பாடசாலைகளாகும். இவற்றிற்கு குறைந்தளவு செலவுகளே செய்யப்பட்டு வருகின்றன. இவற்றை மீளமைத்து வினைத்திறனுடையதாக மாற்ற வேண்டும். மேலும் எல்லாப் பாடங்களிலும் சித்தியின்மை பெறவிரும்புபவர்கள் மீது கல்விச் சமூகம் கவனயீர்ப்பைக் குவியப்படுத்த வேண்டும்.

### சமூகமும் கலைத்திட்ட அமுலாக்கமும்

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் கலைத்திட்டத்தை அமுலாக்குவதிலும் பொறுப்புச் சொல்லுவதிலும் சமூகத்தின் பங்களிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கையிலும் பாடசாலை "முகாமைத்துவ சபைகள்" ஏற்படுத்தும் யோசனை முன்மொழியப்பட்டுள்ளது. சமூகத்தின் அக்கறையை பாடசாலைகள் மீது திருப்புகின்ற முயற்சிகள் போதியதாக இல்லை.

தற்போது தமிழர் வாழும் பிரதேசங்களில் பாடசாலையின் பெதீக வள விருத்தியில் சமூகத்தின் பங்களிப்பு ஓரளவு அதிகரித்திருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. பாடசாலையில் உள்ள பற்றாக்குறைகளை இனம்கண்டு அவற்றை வழங்குவதற்கு சமூகம் முன்வருதல் வேண்டும். பரீட்சையை மையமாகக் கொண்ட கலைத்திட்டத்தை விரைந்து நிறைவேற்றும் பணியை தனியார் ரியூட்டரிகள் மேற்கொண்டுவருவதால் சமூகத்தின் அக்கறையை பாடசாலைகளில் மையப் படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. பிரபலமான பாடசாலைகளில் கூட க.பொ.த (சா.த) க.பொ.த (உ.த) போன்ற பொதுப்பரீட்சைகள் அண்மித்த மாதங்களில் மாணவர்களின் வரவு குறைவாக வுள்ளது. இவ்வாறான நிலைமைகளை சமூகம் அங்கீகரித்திருப்பது போன்ற பிரமை உணரப்படுகின்றது. " பாடம் சார்ந்த கலைத்திட்டத்தை ரியூட்டரிகள் நிறைவேற்றட்டும். ஏனைய இணைந்த பாடச் செயற்றிட்டங்களை பாடசாலைகள் அமுலாக்கட்டும்" என்ற புதிய இருவழி அமுலாக்கல் கலைத்திட்டக் கோட்பாட்டை சமூகம் ஏற்றுள்ளது போல் தெரிகின்றது. பாடசாலைகள் தமது முதன்மைத் தன்மையை இழந்து வருவது ஆராயப்பட வேண்டியதாயுள்ளது.

சமூகத்தின் அதீத ஈடுபாடு காரணமாக தரம்- 5 புலமைப்பரிசிற் பரீட்சையில் மாணவர்க்கு ஏற்படுத்தப்படும் உளத்தாக்கம் கல்வி முன்னேற்றத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தரம்- 5 புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் எல்லோரும் உயர்கல்வி வாய்ப்பை பெறுவார்கள் என உத்தரவாதப்படுத்த முடியாத நிலையில், சமூகத்தின் மிகையான ஈடுபாட்டை இது விடயத்தில் நலிவடையச் செய்தல் வரவேற்கப்பட வேண்டியதாகும். ஏனெனில் மீத்திறன் மாணவரில் மட்டும் கவனக்குவிப்புச் செய்யும் ஆரம்பப் புள்ளியாக தரம்-5 புலமைப்பரிசிற் பரீட்சை விளங்குகின்றது. இது முழுமைத் தொகுதியினரினதும் கலைத்திட்ட இலக்குகளை நிறைவேற்ற தடையாகவுள்ளது.

தமிழர் பகுதிகளில் தற்போது பெருகிவரும் நுகர்வுக் கலாச்சாரப் (Consumer culture) போக்கு காரணமாக சமூக விழாக்கள், போட்டிகள் பெருகி வருகின்றன. இதில் மாணவரும் ஆசிரியரும் ஈடுபடும்போது உரியவாறு கலைத்திட்டத்தை நிறைவேற்ற முடியாதுள்ளது. அத்துடன் சத்தங்கள் மூலம் சூழல் மாசுபடாதவாறு, பேண சமூகம் உதவுதல் வேண்டும், ஆடம்பர விழாக்களைத் தவிர்த்து, சிறந்த கல்விச் சூழலையும், கல்விப் பண்புள்ள மக்கட் தொகுதியையும் தோற்றுவிக்க சமூகம் உதவ வேண்டும்.

### முடிவுரை

பாடசாலைக் கலைத்திட்டம் தமிழர் பகுதிகளிலே உரியவாறு நிறைவேற்றப்படுவதற்கு தடையாக பல காரணிகள் உள்ளன. அவற்றிலே முழு இலங்கைக்கும் பொதுவான சில காரணிகளையும் தமிழர் பிரதேசத்திலே நிலவும் சில விசேஷ காரணிகளையும் இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.


எந்த விதமான அழுத்தங்களுமற்ற சூழலில், செயற்றிறனுடைய அதிபர்களும், ஆசிரியர்களும் கலைத் திட்டத்தை அமுலாக்குவதோடு, வளர்ந்த நாடுகளில் உள்ளதுபோல் மிகக் குறைந்த அளவில் ஆசிரியர் மாணவர் விகிதத்தை பேணி, பலவீனமான மாணவர்கள் மீது கவன ஈர்ப்பைச் செய்யும், போதுதான் "எல்லோருக்கும் கல்வி" "சமத்துவமான கல்வி" "வாழும் வரை கல்வி" " கல்விக்கான சமசந்தர்ப்பம்" என்கின்ற வாசகங்கள் அர்த்த முடியதாக விளங்கும்.

இம்மாத வெளியீடு

# இலங்கையில் முகாமைத்துவக் கல்வி

*மா. சின்னத்தம்பி*

தலைவர், கல்வியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




பக்கம்
xiv + 268

அளவு
145mmx215mm

விலை
ரூ 450

ISBN
955 9429 68 X

**பொருளடக்கம்:** I எண்ணக்கரு, II முகாமைத்துவ கல்வி வளர்ச்சி, III கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி, IV கலைத்திட்டம், V பிரச்சனைகளும் பலவீனங்களும், VI முகாமைத்துவ கல்வி அபிவிருத்தி, நூல் விபரப்பட்டியல், சுட்டி

## வெளிவரவுள்ள கல்வியல்துறைசார் நூல்கள்

- **நவீன கல்விச் சிந்தனைகளின் போக்கு**
  **பேராசிரியர் சோ. சந்திரசேகரன்**
  கல்விப் பீடம்
  கொழும்புப் பல்கலைக்கழகம்
- **ஒப்பீட்டுக் கல்வி**
  **பேராசிரியர் சோ. சந்திரசேகரன்**
  கல்விப் பீடம்
  கொழும்புப் பல்கலைக்கழகம்
- **வகுப்பறைகளில் கல்வி உளவியல்**
  **திரு. உலகநாதர் நவரட்ணம்**
  பணிப்பாளர்
  தமிழ் மொழிப் பிரிவு
  தேசிய கல்வி நிறுவனம்
- **செயல்வழி ஆய்வு: ஓர் அறிமுகம்**
  **திரு. தை. தனராஜ்**
  முன்னாள் பணிப்பாளர்
  தமிழ் மொழிப் பிரிவு
  தேசிய கல்வி நிறுவனம்

**குமரன் புத்தக இல்லம்**

361 1/2, டாம் வீதி, கொழும்பு 12
தொ.பேசி : 242 1388
கைபேசி : 071 410 3489
தொலைநகல்: 242 1388
மின் அஞ்சல்: kumbh@sltnet.lk

3 மெய்கைவிநாயகர் தெரு
குமரன் குடியிருப்பு
சென்னை - 26
இந்தியா
தொ.பேசி: 2362 2680

இணையத் தளம்: www.kumaranbook.com

எமது அடுத்த வெளியீடு


**சர்வதேச கல்வி நிறுவனம்** (International Academy of Education), **சர்வதேச கல்வி பணியகம்** (International Bureau of Education), **யுனேஸ்கோ** (UNESCO) **ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட கல்விசார் செயற்பாடுகள் பற்றிய கைந்நூற் தொடரின்** (Educational Practices Series) **தமிழாக்கம்**

இவ் வரிசையின் முதல் வெளியீடு

# பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள்?

**(How Children Learns)**

**கலாநிதி ஸ்டேலா வொஸ்னியாடோ**



தமிழ் மொழிப் பதிப்பாசிரியர்
பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

மொழிபெயர்ப்பு
திருமதி. புஷ்பா சிவகுமாரன்

பக்கம்
*60*

ISBN
*955 9429 69 8*

விலை
*ரூ 90*

## இவ்வரிசையில் வெளிவரவுள்ள ஏனைய நூல்கள்

1. கற்பித்தல் (Teaching)
2. பெற்றோரும் கற்றலும் (Parents and Learning)
3. பயனுறுதி வாய்ந்த கல்விசார் நடைமுறைகள் (Effective educational practices)
4. கணிதத்தில் மாணவரின் அடைவினை மேம்படுத்தல் (Improving student achievement in Mathematics)
5. போதித்தல் (Tutoring)
6. மேலதிக மொழிகளைக் கற்பித்தல் (Teaching Additional Languages)
7. பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள்? (How children learns?)
8. நடத்தைப் பிரச்சினைகளைத் தவிர்த்தல் - பயனுடைய வழிமுறைகள் (Preventing Behaviors- What works)
9. பாடசாலை ஊடாக HIV/AIDS நோய்களைத் தவிர்த்தல் (Preventing HIV/AIDS in Schools)
10. கற்றலுக்கான ஊக்கல் (Motivation to learn)
11. கல்வி மற்றும் சமூக மன வெழுச்சிசார் கற்றல் (Academic and Social emotional learning)
12. வாசிப்பை கற்பித்தல் (Teaching Reading)
13. பாடசாலைகளினூடாக முன்பள்ளி நிலையில் மொழியறிவை மேம்படுத்தல் (Promoting pre-school language)

அகண்ட ஆழ்ந்த அறிவிற்காய்

வெளிவந்து விட்டது...

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விலை ரூபா 350.00



## முதலாம் ஆண்டுத் தொகுப்பு